# வட்டமேசை மாநாட்டில் டாக்டர் அம்பேத்கர்



ஆர். பட்டாபிராமன்

R. Pattabiraman

அக்டோபர் 2020 சிறுவெளியீடு



வட்டமேசை மாநாட்டில்

# முன்குறிப்பு

அம்பேத்கர் குறித்த புத்தகம் ஒன்றிற்ககாக எழுதப்பட்ட கட்டுரைகளில் இதுவும் ஒன்று. சிறுபிரசுர மின்வடிவம் பெறுகிறது. வட்டமேசை மாநாட்டு விவாதங்களில் அம்பேத்கரின் மேதாவிலாசம்- அறிவுக்கூர்மை எவ்வாறு வெளிப்பட்டது என்பதை இந்த விவாதங்கள் தெளிவுபடுத்தும். இன்று ஒடுக்கப்பட்டோர் சிறிய அளவாவது பெற்றுள்ள அரசியல் அதிகார பகிர்வு, நிர்வாக அதிகார பகிர்வுகளுக்கு அம்பேத்கர் எவ்வளவு கடுமையான பணியை மேற்கொள்ளவேண்டியிருந்தது என்பதை இந்த விவாதங்கள் புலப்படுத்தும். ஆயிரக்கணக்கான பக்கங்களில் ஆவணப்படுத்தப்பட்டு விரவிக்கிடக்கும் விவாதங்களை படிக்க முடியாதவர்களுக்கு இச்சிறு பிரசுரம் துணையாக இருக்கலாம். முழுமையான விவாதங்களை படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

அம்பேத்கர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அரசியல் அதிகாரம் கிடைப்பதை புதிய யுகம் என வர்ணித்தார். பல உரைகளில் எவரையும் கடவுளாக்காதீர்- என்னையும் கடவுளாக்காதீர் என்றார். எந்த தலைமையின் மீதும் வழிபாட்டுணர்வு அவசியமில்லை என்றார். விடுதலை அரசியல் உரிமைகளில் இருக்கிறதே தவிர யாத்திரைகளில் இல்லை. சொந்தக் கால்களில் கடமையுணர்ச்சியுடன் நிற்க கற்பீர் என்பதை அவர் அறிவுறுத்திவந்தார்.

சட்டமியற்றும் அதிகாரம் என்பதே அவர் விவாதத்தின் சாரம் என சொல்லமுடியும். முதலாவது வட்டமேசை மநாடு, இரண்டாம் மாநாடு, அரசியல் சட்ட சீர்திருத்த இணைந்த குழுவின் சார்பில் சாட்சியங்களை பெறுதல்- சர்ச்சில் உட்பட பலரிடம் குறுக்கு விசாரணை போன்றவை இச்சிறு பிரசுரத்தில் சுருக்கமாக இடம் பெற்றுள்ளது. அம்பேத்கர் ஒடுக்கப்பட்டோர் மாநாட்டில் பேசிய உரை, காந்தி- அம்பேத்கர் இடையே சிறுபான்மை குழுவில் நடந்த விவாதம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இப்பிரசுரம் உணர்த்தலாம்.

புனே உடன்பாடு குறித்து ஏராளம் எழுதப்பட்டிருக்கிறது. அது குறித்த சாட்சிய விசாரணைகளில் வந்த கருத்துக்களில் சில இங்கு வைக்கப்பட்டுள்ளன. தாகூர் உட்பட சர்ச்சையில் வருகிறார். இந்து மகாசபை புனே உடன்பாட்டிற்கு எதிராக நின்றதா என்பது விசாரணைக்கு உட்படுகிறது. மத்திய மாநில அரசுகளின் உறவுகள் தீவிரமாக விவாதிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசியலில் இன்றும் தொடரும் பல்வேறு சர்ச்சைகள் குறித்த நீள் விவாதமாக வட்டமேசை விவாதங்களை பார்க்கமுடியும்.

15-10-2020 ஆர். பட்டாபிராமன்

# வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர்

பிரிட்டிஷ் லேபர் அரசாங்கத்தின் முன்முயற்சியால் வட்டமேசை மாநாடுகள் கூட்டப்பட்டன. முதல் மாநாடு நவம்பர் 12,1930 துவங்கி ஜனவரி 19, 1931 வரை நடந்தது. சைமன் கமிஷனை அடுத்து டொமீனியன் அந்தஸ்து, பூரண சுயராஜ்யம் குரல்கள் வலுவாக எழுந்த சூழலில் மாநாடு கூட்டப்பட்டது.

முதல் மாநாட்டில் காங்கிரஸ் பங்கேற்கவில்லை. பிரிட்டிஷ் அரசியல் கட்சிகள் சார்பிலும், இந்திய சமஸ்தானங்கள் சார்பிலும், பிரிட்டிஷ் இந்தியா சார்பிலும் அரசியல் தலைவர்கள் பங்கேற்றனர். முஸ்லீம் லீக் சார்பில் ஆகாகான், ஜின்னா, இந்துக்கள் பிரதிநிதிகள் என மூஞ்சே, ஜெயகர், லிபரல்கள் என தேஜ்பகதூர் சாப்ரு, சிந்தாமணி, ஒடுக்கப்பட்டோர் சார்பில் அம்பேத்கர், ரெட்டைமலை சீனிவாசன், நீதிகட்சி சார்பில் ஆற்காடு ராமசாமி முதலியார், ஏ பி பாத்ரோ, சீக்கியர் சார்பில் சர்தார் உஜ்ஜல் சிங், பார்சி பிரதிநிதியாக காவாஜி ஜெஹாங்கீர், இந்திய கிறிஸ்தவர் சார்பில் கே டி பால், பெண்கள் சார்பில் ராதாபாய் சுப்பராயன் போன்ற முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர்.

இர்வின் - காந்தி உடன்பாட்டை அடுத்து நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்தி பங்கேற்றார். இரண்டாவது மாநாடு செப்டம்பர் 7, 1931 துவங்கி டிசம்பர் 1, 1931 வரை நடைபெற்றது. பெண்கள் பிரதிநிதியாக சரோஜினி நாயுடுவும் இதில் பங்கேற்றார். மூன்றாவது மாநாடு நவம்பர் 17 1932 முதல் டிசம்பர் 24 1932 வரை நடந்தது. மாநாட்டின் விவாதங்களை அடிப்படையாக கொண்டு வெள்ளை அறிக்கை மார்ச் 1933ல் தரப்பட்டு பின்னர் இந்தியா சட்டம் 1935 உருவானது..

வட்டமேசை மாநாடுகளின் விவாதங்களில் அம்பேத்கர் பங்களிப்பு விதந்து பேசப்படவேண்டியதொன்று. அவரது உரைகள் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டு அவரது வால்யூம்களில் இடம் பெற்றுள்ளன. விவாதங்களை வாசிக்கக் கூடிய எவருக்கும் அவர் எவ்வளவு கவனக்குவிப்புடன் இக்காலத்தில் பணியாற்றியுள்ளார் என்பதை உணரமுடியும். உலக நாடுகளின் அனுபவங்களையும் கணக்கில்கொண்டு அம்பேத்கர் ஆற்றிய உரைகள், குறுக்கீடுகள் அறிவுக்கூர்மையும் தெளிவும் மிக்கவை.

இந்திய அரசியலில் இன்றும் தொடரும் பல்வேறு சர்ச்சைகள் குறித்த நீள் விவாதமாக வட்டமேசை விவாதங்களை பார்க்கமுடியும். ஒவ்வொரு பிரச்னையிலும், குறிப்பாக ஒடுக்கப்பட்டவர்களுக்கு அரசியல் அதிகாரம் என்பதற்கு அவர் நடத்திய போராட்டங்களின் சாட்சியாக, அவரது அயராத உழைப்பின் சாட்சியாக அவரது பங்களிப்பை வட்டமேசை விவாதங்களில் நாம் பார்க்கமுடியும்.

வட்டமேசை காலத்தில் இந்தியாவில் அவருக்கு தரப்பட்ட வழியனுப்பு விழாக்களில், வரவேற்பு கூட்டங்களில் ஒடுக்கப்பட்டோர் கோரிக்கைகளை போராட்டங்களை அவர் விளக்கவும் செய்தார். இவையெல்லாம் குறித்து இக்கட்டுரை முடிந்த அளவு சுருக்கமாக பேசுவதாக எடுத்துக்கொள்ளலாம்.

தீண்டப்படாதோர் அரசியல் உரிமை பாதுகாக்க தேசிய மாநாடு ஒன்றை நாக்பூரில் 1930 ஆகஸ்டில் நடத்த அம்பேத்கர் சம்மதம் பெறப்பட்டது.. வட்டமேஜைக்கு தீண்டப்படாதவர்களின் பிரதிநிதியாக அம்பேத்கர் செல்வதே சரியானது என அம்பேத்கருக்கு முன்பிருந்தே தலித்களின் உரிமைக்கு போராடிய சிவராம் ஜன்ப காம்ளே உள்ளிட்டவர் தெரிவித்தனர். இந்த மாநாட்டிற்கு உதகமண்டலம் ராவ் சாகிப் வி அய் முனுசாமிப் பிள்ளை, லக்னோ ராவ்சாகிப் ராம சரணா, வங்க சட்டமன்றம் சேர்ந்த எம்.பி முல்லிக், புனாவின் அம்மையார் குண்ணாபி கடேகர் ஆகியோரையும் அழைக்க முடிவு செய்தனர். ஆகஸ்ட் 8,9 1930ல் நாகபுரியில் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் மாநாடு என அறிவிப்பும் வெளியானது. மாநாட்டுடன் மேற்கூறிய ஒவ்வொருவர் தலைமையிலும் சமூக, கல்வி, இளைஞர், மகளிர் மாநாடு எனவும் அறிவிக்கப்பட்டது.

ஆகஸ்ட் 8, 1930 அன்று அம்பேத்கர் தலைமையில் கூடிய அனைத்திந்திய ஒடுக்கப்பட்ட வகுப்புகளின் பேராயம் கீழ்கண்டவாறு தீர்மானங்களை எடுத்தது.

- இந்திய தேசிய காங்கிரசின் நாட்டு விடுதலை குறித்த கருத்து இந்தியாவின் நலன்களுக்கு பேரழிவும் தீங்கும் விளைவிக்கக்கூடியது. இந்தியாவின் இன்றைய நிலைக்கு டொமீனியன் தகுதியே உகந்தது. அதை உடனே தரவேண்டும்.
- ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைக் காக்க அரசியலமைப்பு சட்டத்தில் பின்வரும் காப்புறுதிகள் செயப்படவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே இவ்விசைவு வழங்கப்படுகிறது.

அ. மத்திய மாநில சட்டமன்றங்களில் போதிய சார்பாண்மை ( பிரதிநிதிகள்)

ஆ. பொதுப்பணிகளில் பணியிட ஒதுக்கீடு.

- இந்தியாவின் சமுதாய நிலைமையை கருத்தில் கொள்ளாமல் அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றுக்கொள்ளத் தக்க அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க இயலாதென்று ஒடுக்கப்பட்ட வகுப்புகள் நம்புகின்றன. சட்ட மறுப்பு இயக்கம் ஒரு சாராரின் கருத்துக்களை வலிந்து திணிக்கும் முறை என்பதால் இப்பேராயம் அதற்கு ஆதரவுதர இயலாது - அதில் கலந்துகொள்ளவேண்டாம் என தீர்மானிக்கிறது.

- வட்டமேசை மாநாடு சிறந்த வழி. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவத்தை அளித்து அரசாங்கம் அதை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.
- ஒடுக்கப்பட்ட மக்களை சட்டமன்றங்களில் நியமனமுறை மூலம் அமர்த்தக்கூடாது. ஆளுனர் சான்று பெற்று நியமனம் என சைமைன் பேசுவதை ஏற்க இயலாது. அவர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.
- தனி வாக்காளர் தொகுதிகளே உகந்தவை என்று இப்பேராயம் நம்புகிறது. எனினும் வயதுவந்தோர் வாக்குரிமை அடிப்படையில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்குப் போதிய சார்பான்மையுடன் கூடிய இட ஒதுக்கீடும் செய்யப்படுமெனில் கூட்டு வாக்காளர் தொகுதி முறையையும்கூட இப்பேராயம் கொள்கை அளவில் ஏற்க ஆயத்தமாயுள்ளது.

அப்பேராயத்தில் அம்பேத்கர் தன் உரையில் முக்கிய கேள்வி ஒன்றை எழுப்பினார். ஒன்றுபட்ட தன்னாட்சியுடைய சமூகமாய் மாற இந்திய மக்களால் இயலுமா? இக்கேள்விக்கு விரிவாக பதிலைத்தேடித் தருகிறார். இந்த நாட்டின் வருங்காலத்தைப் பற்றி எடுக்கப்படும் எந்த இறுதி முடிவிலும் நமது பங்கு இருக்கவேண்டும். எனவே இந்த வினாவுக்கு நாம் பொறுப்புடன் விடை அளிக்கவேண்டும். நமது முடிவு ஏனையோரின் முடிவிலிருந்து மாறுபட்டு இருந்தால் அஞ்சவேண்டியதில்லை என ஒடுக்கப்பட்டவர்களிடம் நம்பிக்கையைத் தருகிறார்..

இந்திய மக்கள் தனித்தனி மனப்பான்மை, பல மொழி, பல சடங்கு, பல சமயக்கோட்பாடுகள்- எதிரான பொருளியல் நலன்கள் கொண்டவர்கள்- ஒன்றுக்கொன்று முரண்பாடுகளைக் கொண்ட மக்கள் திரள் என சொல்லமுடியும். இவை நடைமுறை உண்மைகள். அதே நேரத்தில் லட்வியா, ருமேனியா, லிதுவேனியா, யுகோஸ்லோவியா, செக் போன்ற நாடுகளில் பல கத்தோலிக்க பிரிவுகள், பல்வேறு தேசிய இனத்தவர் வாழ்கின்றனர். இங்குள்ள வேறுபாடுகளை விடவா இந்திய நிலைமை திகைக்கவைக்கப் போகிறது. அவர்கள் தன்னாட்சி சமூகமாக இருக்க முடியும் என்றால் இந்தியாவால் ஏன் முடியாது.

தமதெல்லைக்குள் ஒரே மொழியால், சமயத்தால், பண்பாட்டால் ஒன்றுபட்ட சீரான மக்கள் குழுமத்தைப் பெற்றிருத்தல் மிகச் சில நாடுகளுக்கே வாய்த்துள்ள அரியதோர் நிலையாகும்.

ஜெர்மனியில் 1870க்கு முன்னர் பவேரியர், பிரஷ்யர், சாக்சானியர் என தனிக்குழுக்கள- இனங்கள்- நாடுகளை பொது அரசின் கீழ் கொணராமல் இணைத்திருக்க முடியுமா? பல்வகையாலும் வேறுபட்ட மக்களாய், தேசிய

இனமாய் ஒன்றிணைப்பதற்கான ஒப்பற்ற கருவி பொது அரசாங்கம் ஒன்றுதான். இந்திய நாடு இதை மெய்ப்பிப்பதற்கானதோர் சிறந்த எடுத்துக்காட்டு அல்லவா? எனக் கேள்விகள் முலம் தமது விளக்கத்தை தந்தார் அம்பேத்கர்.

அரசியல் அமைப்பு சட்ட உருவாக்கத்தின்போது இந்த வேறுபாட்டு அம்சங்களை நாம் கணக்கில் கொள்ளவேண்டும். சமுதாய நிலைமைகளைக் கணக்கில் கொள்ளவில்லை என்றால் அதிகார மய்யம் எவரிடம் இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். சிறுபான்மையினரிடம் இருக்குமா? வசதிபடைத்த கல்வி கற்ற மேல்சாதி மேல்தட்டு மக்கள் கைகளில்தான் போய்ச் சேரும். அரசியல் ஆனாலும் பிற துறையானாலும் வல்லவர்களுக்கே வெற்றி என்பது தேற்றம்.

இந்திய மக்கள் உறவோ கணமோ அல்லாத மனிதர்களிடையே அளவிறந்த பாரபட்சம்காட்டி ஒதுக்கும் மனப்பான்மை மிகுந்தவர்கள். சமயப் அடிப்படையில் அமைந்த இந்திய சாதி அமைப்பு ஏணிப்படிகளைப் போன்று பல தரநிலைகளைக் கொண்டது- மேல்நிலைக்கு மதிப்பும், கீழ்நிலைக்கு பழிப்பும் காணப்படுவது. மேல்சாதி மக்களிடம் அரசியல் அதிகாரம்- அவர்களை ஆளும் சாதியாய் ஏற்பது எனில் நமது வழிமுறைகள் மூலம் அதைத் தடுப்பதே நமது கடமையாகும்.

மற்றொரு நாட்டை ஆளும் தகுதி எந்தவொரு நாட்டுக்கும் கிடையாது என்ற காங்கிரசாருடன் நான் ஒன்றுபடுகிறேன். ஆனால் அத்துடன் நிற்காது நியாயத்தை விரித்து, மற்றொரு வகுப்பை ஆளும் தகுதி எந்தவொரு வகுப்புக்கும் கிடையாது என அவர்களிடம் அடித்துக்கூறுவதில் தயக்கம் தேவையில்லை.

இந்த மேல்தட்டிற்கும் ஏழை எளிய மக்களுக்கும் பெருத்த இடைவெளியிருக்கிறது- இவர்கள் அம்மக்களின் உணர்வுகளை அறியமாட்டாதவர்கள்- அவர்களின் எதிர்கால கனவுகளுக்கு பகையாகவே விளங்குவர் என்பதும் உண்மை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாகுபாட்டு உணர்வில் ஊறித் திளைத்துத் தாமே உயர்ந்தவர்கள் என்று வாழும் இவர்கள் கையில் தன்னாட்சி அரசை நம்பி ஒப்படைத்தல் இயலாது.

ஒவ்வொரு தனித்தனி மனிதரின் மதிப்பையும் தனியே உணர்ந்து மதித்தல், ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வாழ்க்கைதான் உண்டு என்பதை உணர்ந்து அவ்வாழ்க்கையில் தகுதிகளுக்கேற்ப உச்சகட்ட உயர்வை அடைய அனைத்து வாய்ப்புக்களையும் அளித்தல் ஆகியவையே மக்களாட்சி அரசின் கோட்பாடாகும்.

The fundamental principle of the modern democratic state is the recognition of the value of the individual, and the belief that as each individual has but one life, full opportunity should be accorded to each to attain his maximum development in that life என்கிற தெளிவை அம்பேத்கர் தன் உரையில் தந்தார்.

மனிதர்கள் ஒன்றன் மீதொன்றாய் வரிசைகளிலும் வரிசை மாற்றியும் அடுக்கி வைக்கக்கூடிய பொம்மைகள் அல்லர் . மேல்தட்டு மக்களின் திறமைகள் நாட்டின் பெருஞ்செல்வம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இத்திறமைகள் மட்டுமே மேலாண்மை செய்வதற்கான உரிமை எதையும் தந்துவிடவில்லை. அவர்களது நன்னடத்தை- திறமைகளை எப்படிப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதையும் பொறுத்துத்தான் இந்த உரிமையைப் பெற முடியும். அந்த வகுப்பினருக்கு நம்மை ஆளும் உரிமையைத் தருவதற்கு முன்பு திறமையைவிடப் பயனைக் குறித்தே நோக்க வேண்டும். எவ்வளவு அறச்சீற்ற வார்த்தைகள் என முழு உரையும் படிக்கும் எவரும் உள்வாங்க முடியும்.

தீண்டப்படாதவர்கள் அனுபவித்துவரும் கொடுமையை விளக்கிய அம்பேத்கர் சாதி இந்துக்களாகிய இவர்கள் போக்கு மாறுபட்டிருக்கும் என நம்பும் அளவுக்கு நாம் ஏமாளியல்ல- ஒரே நாளில் தேவதைகளாய் மாறிவிடும் அற்புதங்களெல்லாம் எங்குமே நடைபெற்றதாக நான் அறியேன் என்றார்.

சமூக சிக்கலுக்கு தீர்வு காண்பதற்குரிய வழிவகைகளை முன்னதாகவே அரசியல் இயந்திரத்தில் அமைப்பதுதான் நிலையான உறுதிப்பாட்டைத்தரும் என்கிற நிலைப்பாட்டை அம்பேத்கர் தன் உரையில் உணரவைத்தார்.

அவ்வுரையில் அவர் ஒன்றைத்தெளிவு படுத்தினார். தன்னாட்சி பெற சமூகக் காரணிகள் தடையாகமாட்டா- ஆனால் அரசிலமைப்பு சட்டத்தில் நலிவுற்றவர்களின் காப்பு அவசியம் . தன்னாட்சி அரசின் அரசியல் அமைப்பு சட்டத்தில் இக்காப்பு ஏற்கப்படவேண்டும் என அவர் வற்புறுத்தினார். உரிமைகள் யாவை என வரையறுப்பதால் மட்டும் உரிமைகளை நாம் பெற்றுவிட முடியாது; உரிமை மறுக்கப்பட்டால் குறை தீர்ப்புக்கான வழிமுறை எப்படி வரையறுக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்தே உரிமைகள் கிடைக்கப்பெறும் என்பதை பார்க்கவேண்டினார்..

இவ்வுரையில் அவர் நேரு குழுவின் அறிக்கை மாயத்தோற்றமே என்றார். தன்னாட்சி இந்தியாவில் வருங்கால அரசாங்கத்தில் உரிய பங்கினை நாமும் பெறுவதொன்றே நமது நலன்களை உறுதியாய் காக்க வல்ல வழிமுறையாகும். சட்டமன்றங்களில் போதிய சார்பான்மை பெறுவதே ஒரே வழியாகும். இத்துடன் கூடுதலான பாதுகாப்பு கிடைத்தால் பெற்றுக்கொள்ளுங்கள்- ஆனால் அதற்கு

மாற்றாக வேறெந்த சலுகையும் ஏற்கவேண்டாம் என ஒடுக்கப்பட்டவர்களின் பாதுகாப்பை அவர் எதிரொலித்தார்.

சிறுபான்மையினரின் பிரதிநிதி அளவை சமூக நிலை, பொருளாதார வலிமை, கல்வி நிலை ஆகியவற்றை கணக்கிட்டு அவற்றுக்கு எதிர்விகித பொருத்தத்தில் உயர்ச்சி இருக்குமாறு சார்பான்மையின் அளவு முடிவு செய்யப்படவேண்டும். இது சமநீதிக்கு வழியாக அமையும் என பங்கீட்டு முறைப் பற்றி பேசினார்.

மேலும் இவ்வுரையில் அவர் தனித் தொகுதி ஒதுக்கீடு- கூட்டுத் தொகுதிகளில் இட ஒதுக்கீடு பற்றி விவாதிக்கிறார் . கூட்டு வாக்காளர் தொகுதி குறித்த அச்சம் சரியானதுதான். அதற்கு மாற்று தனித் தொகுதி கோரிக்கையன்று- வாக்குரிமை வலிமையை அதிகரிப்பது- வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்பதே ஆகும். வயது வந்தோர் வாக்குரிமை ஏற்கப்படுமாயின் கூட்டுத் தொகுதி முறையிலொடுக்கப்பட்ட வகுப்புகளுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும் திட்டத்திற்கு நாம் மறுப்பு தெரிவிக்க வேண்டியதில்லை.

மற்றொரு பாதுகாப்பு என்பது பொதுப்பணிகளில் வேலை வாய்ப்புகளைப் பற்றியதாகும். சட்டமியற்றும் அதிகாரம் போலவே அதை செயல்படுத்தும் அதிகாரமும் முக்கியமானதே. எனவே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசு நிர்வாக கட்டுப்பாட்டிலும் உரிய பங்கு வேண்டும்.

இந்தியா ஒன்றுபட்ட நாடாக வேண்டும் என்பதே நமது அறுதிக் குறிக்கோள் என்பதை சிறுபான்மையினர் மறந்துவிடலாகாது. இதனை முதன்மை நோக்கமாக கொள்ளாத சிறுபான்மையினர் எவரும் தமக்குத் தனியுரிமைகள் சலுகைகள் கோருதல் முறையன்று.

சைமன் கமிஷன் ஒடுக்கப்பட்டோர் நலன் குறித்து ஆய்வு செய்தது. ஆனால் பள்ளிக்கூடம், கிணறு இடர்ப்பாடுகளை மட்டும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவை துன்பத்தில் சிறு துணுக்களே. நியமனமுறை சார்பான்மை தீங்கானது. சைமன் கமிஷனிடமே இதை கண்டித்துள்ளோம். அக்கமிஷன் கூட்டுத் தொகுதிகளில் இட ஒதுக்கீடு- சட்டமன்றங்களில் சார்பான்மை எனத் தெரிவித்தாலும் ஆளுநரால் சான்றுறுதிஅவசியம் என்கிறது. இதை ஏற்கமுடியாது. இது நியமன மறுவடிவம்தான். மற்றவர்களுக்கு தேவைப்படாதபோது ஒடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் அம்முறை ஏன்? நமது நலன்களை முடிவு செய்பவர்கள் நாமாக மட்டுமே இருக்கவேண்டும்.

தொடக்கத்திலிருந்தே மத்திய சட்டமன்றங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வாயிலடைப்பட்ட மன்றமாகவே இருந்து வந்துள்ளன. 1926ல்தான் 150 உறுப்பினர்களில் ஒரேயொரு இடம் ஒதுக்கப்பட்டது. மாநிலங்கள் அவையில்

அதுவும் இல்லை. சைமன் ஆணையம் மய்யப் பேரவைக்கு பரிந்துரைத்தாலும் மாநிலங்கள் அவைக்கு ஏதும் சொல்லவில்லை.

இருபது சதமுள்ள ஒடுக்கப்பட்டவர்க்கு சைமன் கமிஷன் 8 சதம் ஒதுக்கீடு என்றது. சலுகைகளைப் பெறுவதற்கு விசுவாசம்தான் அளவுகோல் என்றால் கொள்கைநோக்கில் மட்டுமின்றி, மெய்யான பற்றுடன் ஒடுக்கப்பட்டவர்கள் பிரிட்டிஷாரை நேசிப்பவர்கள். ஆனால் அவர்கள் தங்கள் பாழ்பட்ட நிலையைக்காட்டித்தான் தங்களுக்கான தேவையை கோருகின்றனர்- விசுவாசத்தை காரணமாக காட்டியல்ல. இனி நம் தலைவர்களின் கடமை பிரிட்டிஷார் இதுவரை நமக்காக என்ன செய்திருக்கிறார்கள் என்பதில் கவனம் செலுத்துவதைவிட்டுவிட்டு நமது எதிர்காலம் என்பதில் அக்கறையுடன் எவருக்கும் அஞ்சாமல் செயல்பாடுகளை திட்டமிடுதலே அவசியம்.

1929 டிசம்பரில் காங்கிரசார் கூடி நாட்டு விடுதலையே இந்தியாவின் குறிக்கோள் என்று தீர்மானம் இயற்றியுள்ளனர். விடுதலைக் கோரிக்கையை நமது எண்ணத்தில் இருந்து நாம் நீக்கியே விடலாம். இப்போதைய நிலையில் அது நடைமுறைக்கு ஒவ்வாதது என்பதுடன் பேரழிவாகவும் அமைந்துவிடக் கூடும் என்பது என் கருத்து.

ஒரே நாடு, ஒரே அரசியலமைப்பு சட்டம், ஒரே எதிர்காலம் எனும் உணர்வுகளால் ஒன்றிப் பிணைக்கப்பட்ட மக்கள்தாம் விடுதலை என்னும் சவாலை ஏற்றுச் செயல்படத்தக்கவர்கள். இத்தகைய நிலையில் இருந்து நமது நாடு வெகு தொலைவில் உள்ளது. எனவே முழு விடுதலை என்பதிலுள்ள ஆபத்தைத் தவிர்த்து டொமினியன் தகுதியே இப்போதைக்கு உகந்த மேலான குறிக்கோளாகும். முழுவிடுதலை எனும் குறிக்கோளுக்கு நமது ஆதரவை மறுக்கவேண்டும் என அவ்வுரையில் அம்பேத்கர் வேண்டிக்கொண்டார்.

இந்தியாவுக்கு பிரிட்டிஷாரின் ஆட்சி ஓர் நற்பேறாகவே வாய்த்தது என்பதில் அய்யத்திற்கிடமில்லை. இந்த அரியத்தொடர்பு நமக்குக் கிட்டியிராவிட்டால் இந்தியாவில் அறிவார்ந்த விழிப்புணர்வு இத்தகைய அளவிலும் வேகத்திலும் நிகழ்ந்திருக்காது. இரு நாகரீகங்களுக்கு இடையிலான உயிர்ப்புள்ள தொடர்புதான் இங்கு நிலவுகின்ற சமுதாய வழக்கங்கள் பலவற்றை மதிப்பீடு செய்யவும் பலவற்றை சமூகக் கேடுகள் என உணரவும் உதவியாய் அமைந்தது. பிரிட்டிஷார் இங்கு வேரூன்றியிராவிடில் ஒரே அரசுமுறை, ஒரே சட்டமுறை எனும் மாபெரும் நன்மையை இந்தியா அடைந்திருக்க முடியாது. இவை நாட்டின் நலத்திற்கு வலிமை வாய்ந்த கருவிகளாகும். இவையே இந்திய மண்ணில் இந்திய தேசியம் வேறூன்றியதற்கான நிலையை உருவாக்கின.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு நாம் கொடுத்த விலையோ நமது வளங்களை ஒப்பிடுகையில் மிக அதிகமானது. இந்திய மக்களின் வறுமைக்கு ஒப்பான

நிலை உலகில் வேறு எங்காவது காணமுடியுமா? பிரிட்டிஷ் ஆட்சியில் 19 ஆம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டில் 5 பஞ்சங்கள்- 10 லட்சம் மக்கள் மாண்டனர். இரண்டாவது கால் நூற்றாண்டில் 4 லட்சம்- மூன்றாவதில் 5 லட்சம் மாண்டனர். அதன் இறுதிக் கால்பகுதியிலோ 2.6 கோடிவரை மடிந்திருக்கக்கூடும். காரணம் பிரிட்டிஷாரின் கொள்கைகள்தான். அவர்களின் அறிவிக்கப்பட்ட கொள்கை இந்தியா திறந்த சந்தை என்பதுதான் அவர்கள் கையாள்கின்றனர்.

பிரிட்டிஷ் அரசின் பேராதிக்கப் போக்கின் தீமைகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு நோக்கினாலும் அந்த ஆட்சியில்தான் இந்திய மக்களின் மேம்பாட்டுக்குக் கொஞ்சமாவது வழியிருப்பதைக் காணலாம் என தான் புரிந்துகொள்வதை அம்பேத்கர் விளக்கியிருந்தார். சட்ட மறுப்பு இயக்கம் நமது நலன்களின் காப்புக்கு உகந்த வழியில்லை என்றார். பலவந்தமே அதன் அடிப்படை - அதிரடி செயல்பாடாகவே அது இருக்கிறது.

புரட்சிக்கும் மெய்யான சமூக மாற்றத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. புரட்சி அதிகார மாற்றத்தை விளவிக்கும். வெறும் அதிகார மாற்றத்தால் நாம் நிறைவு அடைய முடியாது. சமூக சக்திகள் மத்தியில் மெய்யான சமூக மாற்றத்தை விளவிக்கக்கூடிய அதிகாரப் பகிர்வுடன் கூடிய அதிகார மாற்றமே நாம் விரும்பத்தக்கது என தன்நிலைப்பாட்டை புரிய வைத்தார் அம்பேத்கர்.

தீண்டாமைக்கு கண்டனம் தெரிவித்து காங்கிரஸ் தீர்மானம் இயற்றியது- ஆனால் கட்சி உறுப்பினர்கள் தீண்டாமையைக் கைவிடவேண்டுமென்று ஏன் விதி வகுக்கவில்லை? காந்தி தீண்டாமைக்கு எதிராக பயணம் தொடங்கியிருக்கிறாரா- இராட்டைக்காக செய்யும் செலவில் நூறில் ஒரு பங்கு கூட இந்நோக்கத்திற்காக அவர் செலவு செய்ததில்லை. இந்து முஸ்லீம் ஒற்றுமை என்பதற்கு மூன்று வாரம் உண்ணாநோன்பு இருந்தவர் தீண்டப்படுபவர்க்கும் தீண்டப்படாதோர்க்கும் இடையே சற்றுப் பரிவான உணர்வுகள் நிலவிட ஒரேயொரு நாளாவது உண்ணாநோன்பில் இருந்ததுண்டா? என்கிற கேள்வி அவரது உரையில் தொனித்தது.

காங்கிரசின் பொருளாதார நலன்களும் பொதுமக்களுக்கு எதிராகவே இருக்கிறது. அதன் கொள்கைகள் அவியலாக இருக்கிறது. அது தேசிய இயக்கமே தவிர அரசியல் கட்சியல்ல. எந்த காந்தியடிகளின் பொறுப்பில் நமது இன்னல்களை நீக்கும் பணியை ஒப்படைத்துவிட அறிவுறுத்தப்படுகிறோமோ, அந்தக் காந்தியடிகளே, இந்திய சராசரி மக்களைவிட மிகுந்த வாழ்நாட்பேறு பெற்று நம்மிடையே வாழ்ந்து வந்தாலும், நம்மையெல்லாம் பாதுகாக்கும் திறனற்றவராகவே அப்போது இருப்பார்.

ஒடுக்கப்பட்ட இயக்கம் இரு பின்னடைவுகளால் தத்தளிக்கிறது- அவை பொதுக்கருத்தின்மை மற்றும் ஒன்றுபட்ட திரட்சி செயல்பாடின்மையாகும். நாம் நெடுங்காலம் ஊமையாய் இருந்துவிட்டோம்.. பெரும்பாலும் மாகாண அளவில் செயல்படுகிறோம். மத்திய அனைத்திந்திய ஒடுக்கப்பட்ட வகுப்புகளின் சங்கம் மூன்றாண்டுகளாக அலுவலர்களை கொண்டு செயல்படுகிறது- உறுப்பினர் இல்லை. போலி மாயத்தோற்றத்தால் சேவை செய்திட இயலாது. அமைப்புவிதிகளை உருவாக்க குழு ஒன்றை அமைக்கவேண்டும். அரசியல் அதிகாரம் மட்டுமே தீர்வாகிவிடாது. சமூக மேம்பாட்டில்தான் விடுதலை இருக்கிறது. ஒடுக்கப்பட்டோர் தீய வழிகளை கைவிட்டு நட்புக்கும் மதிப்புக்கும் தகுந்தவர்களாய் ஆகிட வாழ்க்கை முறைகளில் மாற்றம் தேவை. கல்வி அவசியம். எழுதப்படிக்க தெரிந்து கல்வியில் உச்சநிலை எய்தவேண்டும். அச்சத்தை அறவே உதறவேண்டும். சிலர் சட்டமன்ற உறுப்பினர் ஆனாலே விடுதலை கிட்டிவிடும் என்கிற மூடநமபிக்கை அகலவேண்டும் என்கிற அறிவுரையை தன் சகோதரர்களிடம் அவர் வலியுறுத்தி தெரிவித்தார்.

மேற்கண்டவுரை அவரே சொன்னதுபோல் நீண்ட உரையாக இருந்தாலும் அதுதான் ஒடுக்கப்பட்டவர்க்கான உத்தியை செயல் தந்திரத்தை வகுத்துக்கொடுக்கும் உரையாக இருந்தது. வட்டமேசை மாநாட்டிற்கு முன்பே எப்படி தன் வாதங்களை அவர் திறம்பட ஒழுங்கமைத்து செல்கிறார் என்பதை இவ்வுரை நிறுவும். எவ்வளவு கடுமையான உழைப்பை மேற்கொண்டு நுண்ணிய விவரங்களை அவர் அம்மாநாட்டிற்கு செல்லும் முன் பொறுப்புடன் திரட்டியுள்ளார் என்பதையும் நாம் அறியமுடியும்.

அக்டோபர் 2, 1930ல் பம்பாய் பரேலில் பத்தாயிரம் ஒடுக்கப்பட்ட மக்கள் பங்கேற்று அம்பேத்கரை வட்டமேஜை மாநாட்டிற்கு வழியனுப்பும் விழா நடைபெற்றது. அம்பேத்கர் தனது உரையில் ஜனதா பத்திரிகை மீண்டும் வெளிவரப்போவதை அறிவித்தார். காங்கிரசை விமர்சித்தும், தன்னாட்சி, அரசியல் அமைப்பு சட்டம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அதிகார பகிர்வு குறித்தும் உரையாற்றினார். வட்டமேஜை மாநாடு தோல்வியடையாமல் இருக்கவேண்டுமெனில் இந்து சார்பாளர்கள் சிறுபான்மை உணர்வுகளை கவனத்தில்கொள்ளவேண்டும். இங்கிலாந்தில் தங்கியிருந்து காவல்துறை, போர்ப்படைகளில் ஒடுக்கப்பட்டோர் சேர நிலவும் தடைகளை நீக்க முயற்சிக்கப்போவதாகவும் அவர் அறிவித்தார். ருசியா, ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாய் பிரச்சாரம் செய்யவிருப்பதாகவும் கூறினார்.

## II

முதலாவது வட்டமேசை மாநாட்டின் அமர்வுகளில் அம்பேத்கர் முன்னெடுத்த மிக முக்கிய கருத்தாக்கங்கள் இங்கு சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

அம்பேத்கர் தனது தோழர்களிடம் என்ன பேசிவந்தாரோ அக்கருத்துக்களை நவம்பர் 20 1930 அமர்வில் அடுக்கித்தருகிறார். பிரிட்டிஷ் இந்திய மக்கள் தொகையில் அய்ந்திலொரு பகுதியினருக்காக நானும் ராவ்பக்தூர் சீனிவாசனும் பேசுகிறோம். இந்தியாவில் மக்களாட்சி அமையவேண்டும் என்றே விழைகிறோம்.

ஒடுக்கப்பட்ட வகுப்பினர் முஸ்லீம்களோடு சேர்த்து எண்ணத்தக்கவர்கள் அல்லர். இந்துக்களுடன் இணைத்துப் பேசப்பட்டாலும் இந்து கட்டுக்கோப்பிற்குள் இடம் பெற்றவர்களல்லர். தனி வாழ்க்கைமுறைகொண்ட, நச்சுத்தன்மையில் தாழ்வான கீழ்நிலை சமுகமாக வைக்கப்பட்டுள்ளவர்கள். தீண்டாமை காரணமாக பிறருடன் கலந்து பழக முடியாது. வாய்ப்பு வசதிகளை சமமாக அனுபவிக்கமுடியாது. அவை மறுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பிரான்ஸ் நாட்டு மக்கள்தொகைக்கு இணையானவர்கள். ஒடுக்கப்பட்டோர் பிரிட்டிஷாருடன் பிணைப்புகொண்டவர்கள். இந்துக்கள், இஸ்லாமியர் எதிர்த்த போர்க்களத்தில் நின்று பிரிட்டிஷ் பேரரசை நிறுவ அவர்கள் உதவியுள்ளனர். வைதீக இந்துக்கள் இழைத்த கொடுமைகளிலிருந்து பிரிட்டிஷார் விடுவித்தவர்கள் என்பதால் அவர்களை இவர்கள் வரவேற்றனர்.. பிரிட்டிஷார் ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலர்களாயினர்.

எங்களுடைய சொந்த சூழ்நிலைகளை மதிப்பிட்டு பார்த்தே சுதந்திரமாக இந்த அரசாங்கம் பற்றி முடிவு செய்கிறோம். பிரிட்டிஷாரின் வருகைக்கு முற்பட்ட இந்திய சமுதாயத்தில் நாங்கள் அனுபவித்ததைத் தற்போதைய நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாங்கள் முன்னேறியிருப்பதாக கருதி காலம் கடத்திக்கொண்டிருக்கிறோம்.

தீண்டாமையின் வெறுக்கத்தக்க நிலையை மாற்ற பிரிட்டிஷ் அரசு எந்த வகையிலாவது முயற்சி புரிந்ததா? கோயிலுக்கு போகமுடியுமா? காவல்துறை, இராணுவத்தில் நாங்கள் சேரமுடிகிறதா? ஆம் என எதுவும் சொல்லமுடியாது. பிரிட்டிஷ் ஆட்சி சில நன்மைகளை செய்திருக்கிறது - ஆனால் அடிப்படை மாற்றம் ஏற்படவில்லை. இங்கு நிலவும் சமூக அமைப்பபை அப்படியே ஏற்றுக்கொண்டு மாறுபாடு ஏதுமின்றி பிரிட்டிஷ் பாதுகாத்தும் வந்துள்ளது. 150 ஆண்டுகள் ஆட்சி செய்தும் சரி செய்யவில்லை. நிலப்பிரபுத்துவ, முதலாளிகள் கொடுமைகள் தெரிந்தும் தனது ஒருவிரலைக்கூட அசைக்க அரசாங்கம் துணிந்து முன்வரவில்லை என்பது வேதனையாகும். அதனிடத்தில் நிலவும் பயமே காரணம் என அம்பேத்கர் விமர்சனம் சென்றது.

சமூக பொருளாதார வாழ்க்கைக் கோட்பாடுகளை மாற்றியமைப்பதற்குத் தயங்காத ஓர் அரசு வேண்டும். பிரிட்டிஷாரல் இதை செய்ய முடியாது. மக்களின் மக்களால் மக்களுக்கான ஆட்சியால் மட்டுமே அதனை நிறைவேற்றிக் காட்ட முடியும். ஒரு சுதந்திர அரசியல் அமைப்பிலேதான் அரசியல் அதிகாரம் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. அது இல்லாமல் மக்களுக்கு ஒரு விடிவுகாலத்தை நாங்கள் உண்டாக்க முடியாது.

குடியேற்ற நாடு டொமினியன் அந்தஸ்து எனில் ஒடுக்கப்பட்டவரிடம் சில கேள்விகள் இருக்கின்றன. அத்தகுதி பெற்ற இந்திய அரசு எவ்வாறு இயங்கப் போகிறது? அரசியல் அதிகாரம் யாரிடம்- மையக்களம் எங்கு இருக்கும்? ஒடுக்கப்பட்டோர் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பார்களா? இவை அவர்கள் ஆர்வம் காட்டும் கேள்விகள்.

இந்திய சமுதாயம் ஏறுமுகமாக அமைந்த மதிப்பும் இறங்குமுகமாக அமைந்த வெறுப்பும் கொண்ட சாதிமுறை கொண்டது. மக்களாட்சி அரசாங்கத்திற்கு இன்றிமையாததாக உள்ள சமத்துவம், சகோதரநேயம் ஆகிய உணர்வுகள் வளர இடமே கிடையாது. இந்திய சமூகத்தில் அறிவாற்றல் மிக்க கூட்டம் உயர் வகுப்பிலிருந்தே வந்துள்ளனர். இவர்கள் தமது குறுகிய சாதிப்பித்தையோ, தனிமைப்படுத்திகொள்ளும் போக்கையோ உதறித்தள்ளியவர்கள் அல்லர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் சிக்கல் சமூக சிக்கல் என்றும் - தீர்வு அரசியலில் இல்லை என சொல்லப்படுவதை மறுக்கின்றோம். அரசியல் ஆதிக்கவுரிமை கிடைத்தாலன்றி ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் சிக்கல் தீராது. அது முதன்மையாக அரசியல் சிக்கலே அன்றிச் சமூக சிக்கல் அன்று. அவ்வாறே கருதப்படவேண்டும் என வேண்டுகிறேன் என தன் வாதத்தை அம்பேத்கர் முன்வைத்தார்.

”It must be recognised that Indian Society is a gradation of Castes forming an ascending scale of reverence and a descending scale of contempt—a system which gives no scope for the growth of that sentiment of equality and fraternity so essential for a democratic form of Government. It must also be recognized that while the intelligentsia is a very important part of Indian society, it is drawn from its upper strata and although it speaks in the name of the country and leads the political movement, it has not shed the narrow particularism of the class from which it is drawn.”

எங்கள் சிக்கலை பொது அரசியல் சிக்கலாகக் கருதித் தீர்க்க வேண்டும். எதிர்காலத்தில் அமையவிருக்கும் ஆட்சியாளர்களின் நல்லெண்ணம், அனுதாப உணர்வுக்கு அதனை விட்டுவிடக் கூடாது. எங்கள் சிக்கல் காலப்போக்கில் எளிதாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்று நம்பமுடியாது. நாங்கள் பொறுப்பான ஆட்சியை விரும்புகிறோம். வெறும் எசமானர்கள் மாற்றமாக அமைந்த அரசாங்கத்தை அல்ல. இந்திய தேசிய வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஓர்

இந்தியன் என்ற வகையில் இந்தியாவுக்கு ஒருமைப்பாட்டு வடிவிலான அரசு தேவை என உறுதியாக நம்புவதனைச் சீர்குலைக்கும் சிந்தனை எதுவும் எனக்கு மகிழ்ச்சி அளிக்காதவை- இந்திய நாடு சரியாக உருவாவதற்கு ஒருமைப்பாட்டு அரசமைப்பே பெரிதும் உதவக் கூடியது. நாட்டின் விடுதலை, அதிகாரத்தில் ஒடுக்கப்பட்டோர்க்கு பங்கு, நாட்டின் ஒருமைப்பாடு ஆகிய அம்சங்களை வலியுறுத்திய உரையைத் அம்பேத்கர் தந்திருந்தார்.

டிசம்பர் 1930 மாதத்தின் அமர்வுகளில் டிசம்பர் 9, 15, 16, 31 நாட்களின் உரைகளில் ஒடுக்கப்பட்டோர் அரசியல் அதிகாரம் என்பதை ஏற்காத எந்த அரசியல் அமைப்பு சட்டத்தையும் தங்களால் ஏற்கமுடியாது என்பதை அவர் அழுத்தமாக தெரிவித்தார்.

டிசம்பர் 9 1930 உரையில் கவர்னர் அதிகாரம் பற்றி அம்பேத்கர் கருத்துக்களை கூறினார். சில விஷயங்களில் கவர்னர் அவர்களுக்குத் தலைமை அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டும். சைமன் கமிஷன் இதனைக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் மாநிலத்தின் பாதுகாப்பையும் அமைதியையும் காக்க எதனையும் இரத்து செய்யும் அதிகாரங்கள் வேண்டும் என்பதை ஏற்க இயலாது. பொறுப்புள்ள மாநில அரசாங்கத்தின் அதிகாரங்களை அவ்வாறு செல்லத்தகாதவை ஆக்கக்கூடாதென்றார். அதே நேரத்தில் நெருக்கடி காலத்தில் அமைச்சரவையின் ஆலோசனை பெறாமலேயே காவல்துறை அதிகாரிகளை நியமிக்கவும் மாற்றவும் ஆளுநர் அதிகாரம் இன்றியமையாதாகும் என்றார். மேல்சபையை திணிக்கக்கூடாது. மாநில சட்டமன்றம் அதை தேவையென கருதுமெனில் விருப்பதீர்மானம் நிறைவேற்றவேண்டும். அதன் பின்னர் மேலவை அமைக்கலாம் என்பதையும் ஆலோசனையாக அவர் வைத்தார்.

டிசம்பர் 15 1930 உரையில் மாநில சட்டமன்றங்களில் நியமன உறுப்பினர்களே இருக்கவேண்டியதில்லை. வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை மேலவை கொண்டிருக்கவேண்டும். என்னுடைய சமுதாய மக்களுக்கு வாக்குரிமைக்கு இடமளிக்காத ஓர் அரசியலமைப்பை நான் ஏற்க மாட்டேன் என அம்பேத்கர் கருத்து தெரிவித்தார்.

டிசம்பர் 16 1930 உரை கவர்னர் ஜெனரலின் சிறப்பதிகாரம், மாநில ஆட்சிமுறை குறித்து அமைந்தது. மக்களின் எந்தப் பிரிவினரின் நலனுக்கும் கெடுதல் நேரிடுவதைத் தடுக்க அவருக்கு அதிகாரம் இருக்கவேண்டும். இப்படி ஒன்று கனடா அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ளதை அம்பேத்கர் சுட்டிக் காட்டினார்.

மாநிலங்களின் தன்னாட்சியில் அதன் சுதந்திர செயல்பாடு என்பதை எச்சரிக்கையுடன் அணுக அம்பேத்கர் வேண்டிக்கொண்டார். அதன் தன்னாட்சித் தன்மையைக் கட்டுப்படுத்தக் கூடிய சில உண்மைகளை கருத்தில்

கொள்ளவேண்டும். அகில இந்தியத்தன்மை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கு முரண்படாததாக தன்னாட்சி தன்மை இருக்கவேண்டும். அந்த அதிகாரங்களை செயல்படுத்தும் ஆட்சிப்பொறுப்பில் மத்திய அரசுக்கும் பங்கிருக்க வேண்டும்.

தொழிலாளர் சட்டங்கள், விவசாயம்- குத்தகை சட்டங்கள் மாநிலப் பொருளாக கொள்ளவேண்டியதே என்றாலும் அத்தகைய குறுகிய வட்டத்திற்குள் வைத்தே சட்டம் இயற்ற வேண்டியது என நான் கருதவில்லை என்றார் அம்பேத்கர். மாநில தன்னாட்சியில் தலையிடுவதாக இருந்தபோதிலும் இத்தன்மையுள்ள பொருள்கள் மத்திய அரசின் ஆட்சி வரம்பிற்குட்பட்டதாகவும் இருக்கவேண்டும். மாநில மத்திய அரசுகளுக்கிடையே வரையறை செய்யப்படாமல் விடப்படும் அதிகாரங்கள் மத்திய அரசின் பொறுப்பில் விடப்படவேண்டும்.

தேசிய உணர்வைவிட மாநில, உள்ளூர் பற்றிய குறுகிய பற்று ஓங்கியிருப்பதோடு, பிரிவினைப் போக்கும் வளர்ந்துவரும் இந்திய நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மாநிலங்களுக்குத் தன்னாட்சியை அளித்து மத்தியில் கூட்டாட்சியை அமைக்க நாம் முயலும்போது, வலிமையும் ஒருமைப்பாட்டுணர்வும் கொண்ட இந்தியாவை அமைக்க வேண்டிய சிக்கலும் நமக்கு உள்ளது. மாநிலப் பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினருக்குத் தொல்லை கொடுத்து இக்கட்டான சூழ்நிலையில் அவர்களை வைக்கும்போது தலையிட்டுப் பாதுகாப்பதற்குரிய அதிகாரமன்றம் ஒன்று மாநிலத் தன்னாட்சிக்கு அப்பால் இருக்கவேண்டும்.

மாநிலங்களில் சட்டமன்றங்கள் அந்தந்த மாநிலத்தின் அனைத்து மக்களையும் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக இருக்கும். அமைச்சரவையில் வகுப்புவாரியான சாதி அடிப்படையில் பிரதிநிதித்துவம் ஏற்புடையதல்ல. அரசியல் அமைப்பு சட்டப்படி சிறுபான்மையினருக்கு வேண்டிய பாதுகாப்புகள் செய்யப்படவேண்டும். அப்போது பெரும்பான்மையினர் ஆதிக்க அமைச்சரவையால் ஆபத்து என்கிற பயம் இல்லாமல் போகும். அன்றாட நிர்வாகத்தில் தலையிடும் அதிகாரத்தை ஆளுநருக்கு தரக்கூடாது. அமைச்சரவை அன்றாட நிர்வாகத்தைக் கூட்டுப்பொறுப்பு அடிப்படையில் நடத்த அனுமதிக்கவேண்டும்.

மாநில அளவில் ஆட்சிப் பணிகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் அந்தந்த மாநிலங்களைச் சார்ந்ததாகவே இருக்கவேண்டும் என்பதை கொள்கை அளவில் ஏற்கலாம். ஆனால் இந்தியர்கள் சாதி வகுப்புணர்வு கொண்டவர்கள். ஆட்சிப்பணிகளை இந்திய மயமாக்குவதில் அவசரம் காட்டவேண்டாம்- சிறிது காலத்தில் அய்ரோப்பிய பணியாளர்களை வைத்திருப்பது இன்றிமையாதது எனவும் அம்பேத்கர் தனது வேண்டுகோளை வைத்தார்.

டிசம்பர் 22 1930ல் ஒடுக்கப்பட்டவர்க்கு என்ன இடம் என்கிற கேள்வியை அம்பேத்கர் பிரதானமாக எழுப்பினார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு டொமீனியன் அந்தஸ்திலோ அல்லது பொறுப்பான அரசாங்கத்திலோ இடம் இருக்கும் என நம்பினாலன்றி அதற்கு என்னால் மனப்பூர்வமாக இசைவளிக்கமுடியாது என்றார்.

இந்திய மக்கள் அரசாங்க பொறுப்புகளுக்கு வரத் தகுதியில்லாதவர்கள் எனும் வாதங்களை அம்பேத்கர் எதிர்த்தார். வாக்குரிமை குறித்த தன் அற்புதமான புரிதல் ஒன்றை நல்கினார். சமுதாயத்தில் இணைந்து வாழும் வாழ்க்கையோடு ஒருவன் தன்னையும் சேர்த்தழைத்துச் செல்வதற்கான வரையறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான உரிமை என அறிந்துகொண்டுள்ளதாக வரையறுக்கிறார். மற்றவர்களுடன் எந்த வரையறைகளின் பேரில் நட்புறவுடன் வாழமுடியுமோ அதை ஒழுங்கமைத்துக்கொள்வதற்கான அதிகாரமது. சொத்துடைமை மற்றும் மேட்டுக்குடிகளுக்கு மட்டும் வாக்குரிமை என்றால் கீழ்த்தரப்பு மக்கள் அவர்தம் தயவில் வாழும் வரையறைகளாகிவிடுகிறது. வாக்குரிமை தனிநபரின் உள்ளார்ந்து கலந்திருக்கிற உரிமை.

சென்னை, வங்காளம், அய்க்கிய மாநிலங்கள் ஏறக்குறைய பிரான்சு, பிரிட்டன், இத்தாலி மக்கள் தொகையைக் கொண்டிருக்கின்றன. சென்னை 132, வங்கம் 140, அய்க்கிய மாநிலம் 140 உறுப்பினர்களைக் கொண்டிருந்தால் பிரான்சு கீழ்ச்சபை 626யை, இங்கிலாந்து 600யை, இத்தாலி 560யைக் கொண்டிருக்கின்றன. பல்வேறு அனுபவங்களை எடுத்துக்காட்டி வயதுவந்தோர் வாக்குரிமைக்கு மாற்று ஏதுமில்லை என்பதை அம்பேத்கர் வற்புறுத்துகிறார்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வோர் ஆணும் பெண்ணும் வாக்கினைப் பயன்படுத்தி இந்த நாட்டின் பெருந்தொகையான மக்களின் பிரதிநிதியாக இருக்கப்போகிற வேட்பாளரின் முடிவைத் தீர்மானிக்கும் திறமையைப் பெற்றிருக்கிறார்கள் என்று அறிந்துகொண்டால் இன்றி கூட்டுவாக்காளர் தொகுதிக்கு சம்மதிக்கப்போவதில்லை என்கிற நிலைப்பாட்டை அம்பேத்கர் அறிவித்தார். மத்திய சட்டமன்றம் வயதுவந்தோர் வாக்குரிமையுடன் கூடிய 500 உறுப்பினர்கள் கொண்டதாக இருக்கவேண்டும் என வாதாடினார்.

டிசம்பர் 31 1930ல் அவரது உரை மிக ஆழமாக இருந்தது. ஒடுக்கப்பட்டவர்களின் அரசியல் உரிமைக்கான திறமையான வாதமாக இருந்தது. ஒடுக்கப்பட்டோர் 430 லட்சம் உள்ளனர். அவர்களின் இன்னல்களை எடுத்துரைக்க இங்கு இருவர் மட்டுமே இருக்கிறோம். பொறுப்பு எவ்வளவு பெரியது என புரிந்துகொள்ளுங்கள். அதிக நேரம் எங்களுக்கு தேவைப்படும் என வேண்டினார்.

இந்தியாவில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் முஸ்லீம் சமுதாயத்தினருக்கு அடுத்தபடியாக வரும் சமுதாயத்தினர். அவர்களது வாழ்நிலை கீழ்த்தரமாக இருக்கிறது. சிறுபான்மையினர் உரிமைகள் அரசியலில் பாதிக்கப்படவில்லை. அவர்கள் சமுதாயத்தில் அரசியலில் எல்லா உரிமைகளையும் அனுபவித்து வருகின்றனர். ஆனால் ஒடுக்கப்பட்டோர் நிலைமையே வேறு. அவர்களுக்கு உரிமையே இல்லை. உரிமைகளை அனுபவிக்க பெரும்பான்மை வகுப்பினர் தடையாக உள்ளனர்.

இந்தியாவில் வருங்கால அரசியலமைப்பில் பெரும்பான்மையோர் ஆட்சி ஏற்பட்டால் அது நிச்சயம் சாதி இந்துக்களின் ஆட்சியாகத்தான் இருக்கும். இந்த சாதி இந்துக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு நியாயம், நீதி, சமத்துவம், மனசாட்சி எல்லாம் பலியிடப்படும். சட்டரீதியாகவும் நிர்வாகரீதியாகவும் சிறுபான்மை வகுப்பினரின் நலன் புறக்கணிக்கப்படும்- குடி உரிமைகள் காற்றிலே பறக்க விடப்படும். ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் மற்ற சிறுபான்மை வகுப்பினரும் அஞ்சுவது இதுதான்.

தீண்டத்தகாதவர் என்றால் போலீஸ் வேலை, இராணுவவேலைக்கு சேர்க்க மறுக்கின்றனர். 1892வரை சென்னை பம்பாய் மாநிலங்களின் இராணுவத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இருந்தனர். பின்னர் அவர்களை நியமனம் செய்யக்கூடாது என விதி இயற்றப்பட்டது. பஸ்களில் இடம் கிடைப்பதில்லை. பொதுக்கிணற்றிலிருந்து நீர் எடுக்கமுடியாது. பள்ளிகளில் இடம் கிடையாது. இந்த இன்னல்கள் சிறுபான்மையோருக்கு இல்லாத இன்னல்கள்.

ஒடுக்கப்பட்டவர்களின் பொருளாதார இன்னல்கள் மிக அதிகமானது. பொருளாதார சுதந்திரம் என ஏதுமில்லை. சிலர் மட்டுமே சாதி இந்துக்களிடம் குத்தகைதாரர்களாக உள்ளனர். பலர் பண்ணைக்கூலிகள். அவர்கள் தரும் உணவைக் கொண்டு உயிர் வாழ்பவர்கள்.

சமுதாய புறக்கணிப்பு எனும் கொடுமையான ஆயுதம் கொண்டு அவர்கள் அடக்கப்படுகிறார்கள். இது பலாத்காரத்தைவிட கொடுமையானது. தீண்டாமை சட்ட சம்மதமற்றது என்பது வரவேண்டும். இந்த அநீதியிலிருந்து விடுதலை கிடைத்த பிறகே அரசியலமைப்பில் நாங்கள் பங்குகொள்ள முடியும். சட்டப்பேரவைக்கான எங்கள் பிரதிநிதிகளை நாங்களே தேர்ந்தெடுக்கவேண்டும். அதை நியமனம் செய்யக்கூடாது. கூட்டுத் தொகுதி தனித் தொகுதி பிரச்னையில் வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை கொடுத்தால் நாங்கள் கூட்டுத் தொகுதியையும் அதற்குள் அடங்கிய ஒதுக்கப்பட்ட இருக்கைகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். வயதுவந்தோர் வாக்குரிமை என்பதை எங்களுக்கு கொடுக்கவில்லையென்றால் எங்கள் பிரதிநிதித்துவத்தை பெற தனித்தொகுதிமுறையை நாங்கள் கேட்கவேண்டியிருக்கும் என்றார் அம்பேத்கர்.

எவ்வளவு சீட் ஒதுக்குவது என்ற விவாதத்தில் இவ்வளவுதான் என திட்டவட்டமாக கூறுவதற்கில்லை. அலட்சிய மனோபாவம் கூடாது , சார்பற்ற முறையில் நடத்தப்படவேண்டும் என்ற அளவிலேயே நிதானமாக கருத்தை வைத்தார் அம்பேத்கர்.

ஒடுக்கப்பட்டவர்களாகிய நாங்கள் எங்களுக்கும் இந்துக்களுக்குமிடையே முழுப்பிரிவினை வேண்டும் என்று கோருகிறோம். இதுதான் முதலாவதாக செய்யப்படவேண்டியது. அரசியல் காரணங்களுக்காகவே நாங்கள் இந்துக்கள் என அழைக்கப்படுகிறோம். சமுதாயத்திலே அவர்கள் எங்களை சகோதரர்களாக கருதுவதில்லை என்று தன் வேதனையை கோரிக்கைகயின் ஊடாக வெளிப்படுத்தினார் அம்பேத்கர்.

முன்னதாக முதல்நாள்  டிசம்பர் 30 அன்று நடந்த அமர்வில் ஒரு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையம் இருககவேண்டியதன் அவசியத்தை அம்பேத்கர் வற்புறுத்தினார்.

ஜனவரி  1931 அமர்வுகளிலும் அரசியல் அமைப்பின் பல நுணுக்கமான அம்சங்கள் குறித்து தன் பார்வையை அம்பேத்கர் வைத்தார்.

ஜனவரி 1 அன்று மக்கள் தொகையில் 25 % உயர்வுக்கு வாக்குரிமையை விரிவாக்குவது விரும்பத்தக்கது என்பது எங்கள் அபிப்பிராயம். வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பதுதான் இலட்சியம் என்றார் அம்பேத்கர்.

வாக்குரிமைப் பற்றி துணைக்குழு ஜனவரி 16 1931ல் அறிக்கையை தந்தது. அதில் வாக்குரிமை கமிஷன் அமைப்பது, வாக்காளர் தொகுதிகளை அதிகரித்து மக்கள் தொகையில் 10 சதத்திற்கு குறையாமல் வாக்குரிமை அளிக்க கமிஷன் ஏற்பாடு செய்யவேண்டும்- ஆய்வு நடத்தி 25 சதம்வரை வாக்களிக்க இயலுமெனில் - அது விரும்பத்தக்கது எனில் அவ்வாறே செய்யப்பட கமிஷன் பணிக்கப்படவேண்டும் என்பது காணப்படுகிறது. அம்பேத்கர், ராவ்பகதூர் சீனிவாசன், சிவராஜ் போன்றவர்கள் வயது வந்தோர் வாக்குரிமை உடனடியாக என்பதை வலியுறுத்திய செய்தியும் அதில் இடம்பெற்றுள்ளது.

ஜனவரி 14 1931 உரையில் தீண்டாமை இல்லை என காகிதத்தில் கூறுவதால் மட்டும் பலனில்லை. தனிநபருக்கு அவருடைய உரிமைகள் அமுலாக்குவதற்கான பரிகாரம் அவசியமானதாகும் என்பதை அம்பேத்கர் வலியுறுத்தினார். வயது வந்தோருக்கு வாக்குரிமை இருக்கிறதோ இல்லையோ பத்தாண்டுகளுக்கு எங்களுக்குத் தனித் தொகுதிகள் வேண்டுமென்றும், அது குறித்து தெளிவையும் கோரினார் அம்பேத்கர்.

முன்னதாக அம்பேத்கரும் இராவ்பக்தூர் சீனிவாசனும்  ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் காப்புரிமைக்கான திட்டம் என்ற நீண்ட குறிப்பினை

சிறுபான்மையினர் துணைக்குழுவிற்கு கொடுத்தனர். அம்பேத்கர் அக்குறிப்பில் காணப்பட்ட சில முக்கிய அம்சங்களையே தனது உரையில் கொணர்ந்தார்.

ஒடுக்கப்பட்ட வகுப்பார் நலன் குறித்து மூன்றாம் துணைக்குழுவின் அறிக்கை 19-1-1931ல் வெளியானது. அதில் வகுப்புவரி பிரதிநிதித்துவம் குறித்து சொல்லப்பட்டிருந்தது. நியமனம், Joint Electorates with reserved seats, separate electorates என்பது விவாதமானது. அனைவரும் ஏற்றுகொண்ட ஒரே ஒரு கோரிக்கை தனித்தொகுதி தேர்தல்முறைதான் என்பதை விவாதம் தெளிவாக்கியது, தேர்தலுக்காக ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்து மக்கள் தொகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு தனி வகுப்பினராகக் கருதப்படவேண்டும் என்று அந்த வகுப்பாரின் பிரதிநிதிகள் கோரியதன் விளைவாக எழுந்த கடும் சிக்கலும், ஆட்சேபமும் தீர்வுகாண முடியாததாகிறது. சிறுபான்மை வகுப்பாரும் ஒடுக்கப்பட்ட வகுப்பாரும் தங்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்பட்டால் ஒழிய இந்தியாவிற்கான சுயாட்சி அரசியல் அமைப்பு சட்டத்திற்கு உடன்பாடு அளிக்க மாட்டார்கள் என்று திட்டவட்டமாக உரைத்தனர் என்பதும் அவ்வறிக்கையில் இடம் பெற்றது.

ஜனவரி 16 1931 நடந்த அமர்வில் அரசுப்பணிகளில் அனைவருக்குமான வாய்ப்பு என்ற அம்பேத்கர் கோரிக்கையில் தங்களுக்கும் உடன்பாடு உண்டு என மூஞ்சே, சாப்ரூ தெரிவித்தனர். மூஞ்சே 'திறமையோடு ஒத்துப்போகுமாறு' என்பதைக் குறிப்பிட்டார். அதை அம்பேத்கரும் ஏற்றார். இந்தியமயமாக்குதல் என்று சொல்லி எல்லா வகுப்பாரும் சேர்க்கப்படாமலேயே கூட செய்யமுடியும். இந்திய ஆற்றலும் அய்ரோப்பிய ஆற்றலும் சம்பளம், ஓய்வூதியம் பிற சலுகைகள் விஷயத்தில் இணையாகவே வைத்து எண்ணப்படவேண்டும் என்றார் அம்பேத்கர்.

# III

இரண்டாவது வட்டமேசை மாநாட்டின் அமர்விற்கு புறப்படும் முன்னர் பெண்கள் மத்தியில் ஆகஸ்ட் 14, 1931ல் உரையாற்றினார் அம்பேத்கர். வட்டமேஜையில் 125பேர் கலந்துகொண்டால் இருவர்தான் நாங்கள் கலந்துகொள்கிறோம். மண்ணையும் விண்ணையும் அசைப்பதுபோல் தீவிரமாக போராடுவோம். காந்தி இப்போதைக்கு உங்கள் நலன் மேம்பட எதையும் செய்யப்போவதில்லை. நாம் சொந்தக் கால்களில் நின்றுதான் போராடவேண்டும் என்ற செய்தியை தந்து மாநாட்டிற்கு சென்றார்.

இரண்டாவது மாநாடு செப்டம்பர் 7, 1931 துவங்கி டிசம்பர் 1, 1931 வரை நடைபெற்றது. செப்டம்பர் அமர்வுகளில் 16, 18, 21 ஆகிய தினங்களில்

அம்பேத்கர் ஆற்றிய உரைகளின் சாரம் கூட்டாட்சி, சட்டமன்ற அமைப்பு அவைகளின் உறவு- அதிகாரம், மேலவை அவசியமா, சமஸ்தானங்கள் உறவு, ஒடுக்கப்பட்டோர் பிரச்னைகளை ஆகியவற்றை மய்யமிட்டு இருந்தது.

அம்பேத்கர் செப்டம்பர் 16 1931 உரையில் கூட்டாட்சி சட்டமன்ற கட்டமைப்பு இரு அவைகளைக்கொண்டா- ஒரு சபையுடன்தானா எனத்தெரியவேண்டும் எனக்கேட்டார். எனக்கு மேல் அவையின் பயன்மீது நம்பிக்கை கிடையாது. இரு அவைகளின் உறவுமுறைகள் எவை- மேல் அவையின் நச்சுப்பற்கள் தக்க பாதுகாப்புகளுடன் பிடுங்கப்படுமானால் இந்தியாவில் ஒரு மக்களாட்சி அரசாங்கத்தை அமைப்பது சுலபம். அதுவே பாதுகாப்பானதும் ஆகும். இவ்வாறு ஏற்பாடு இருக்குமெனில் இருசபை குறித்து மறுப்பில்லை. இம்மன்றத்திற்கு மாநில பிரதிநிதிகள் மறைமுக வாக்கெடுப்பின் மூலமா அல்லது நேரடி வாக்கெடுப்பிலா எப்படித் தேர்வு என்கிற பிரச்னை தெளிவாக்கப்படவேண்டும். கீழ்சபை எனில் அது நேரடித்தேர்தல் வகையில்தான் என்பது ஏற்கப்படவேண்டும் என்பதை அம்பேத்கர் வற்புறுத்தினார்.

இந்தியாவில் பொறுப்புள்ள ஆட்சி அமைவது மக்கள் கையில் என்பதை இவ்வாறு அவர் சுட்டிக்காட்டினார்.

In my opinion, what is of the utmost importance is that the people of India should be impregnated with the sense that, in the last resort, they are responsible for the good government of the country. And I venture to suggest that, unless the Indian citizen is made to feel that it is he who can make or unmake the government, we shall never be able to succeed in establishing the true foundations of a responsible government in India.

"இந்தியாவில் நல்லாட்சி அமையவேண்டுமானால் , அத்தகைய நல்லாட்சியை அமைப்பதென்பது தங்களின் கரங்களில் தான் உள்ளதென்பதை மனமார உணர்ந்து அந்த உணர்ச்சி உந்துதலுடன் செயல்படவேண்டும். ஒரு நல்லாட்சியை அமைப்பதும், அமைக்காமல் போவதும் தாங்களே என்பதை இந்தியர்கள் உணர்ந்து கொள்ளாதவரை, ஒரு பொறுப்புள்ள ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்த முடியாது என்பது எனது கருத்தாகும்"

சமஸ்தானங்கள் பங்கேற்பு என்பதை அவர்கள் முடிவிற்கு விட்டுவிடக்கூடாது. தனியரசாக பங்கேற்க அனுமதித்தால் அவர்கள் எண்ணிக்கை கூடிவிடும். அவர்கள் மட்டுமே 570 பேர் ஆகிவிடுவர். சமஸ்தானங்களின் நிலையை டி பி குண்டப்பா அவர்களின் புத்தகம் ஒன்றைக் காட்டி அம்பேத்கர் எடுத்துரைக்கிறார். ஏறத்தாழ 450 சமஸ்தானங்கள் 1000 சதுர மைகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கின்றன. லட்சம் மக்கள்தொகை மட்டுமே கொண்ட 452 சமஸ்தானங்கள், லட்ச ரூபாய் வருவாயில் 374 சமஸ்தானங்கள் இருக்கின்றன .

பிரிட்டிஷ் இந்தியா என்பதோ 10.94 லட்சம் சதுர மைல், 22.2 கோடி மக்கள் தொகை, 273 மாவட்டங்களைக் கொண்டது. சராசரி கணக்கிட்டால் 4000 சதுர மைல், 8 லட்சம் மக்களைக்கொண்டது பிரிட்டிஷ் மாவட்டம். இப்படிப்பார்த்தால் ஒவ்வொரு மாவட்டமும் சமஸ்தானமல்லவா என அம்பேத்கர் வினவினார். இருக்கும் 562 சமஸ்தானங்களில் மாவட்ட அளவிற்கு இருப்பவை 30 தான். சூரத் சமஸ்தானங்களில் 14 வருவாய் ரூ 3000க்குள்தான் இருக்கின்றன. 5 சமஸ்தானங்கள் ரூ 100க்குள் வருவாய் கொண்டவை.

சமஸ்தானங்கள் கேட்பதையெல்லாம் கண்மூடித்தனமாய் கொடுக்கமுடியாது என அம்பேதகர் குறிப்பிட்டதை பிக்கானீர் மகாராஜா மறுத்தார். கூட்டாட்சிகுழு சொல்வதை சமஸ்தானங்கள் கண்மூடித்தனமாய் ஏற்கவியலாது என்றார். அம்பேத்கர் பலர் எழுப்பிய சந்தேகங்களுகு தன் பதிலாக அவர்களின் பிரதிநிதித்துவம் எவ்வாறு அமையவேண்டும் என சிந்திக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். மன்னர்களின் பிரதிநிதியாக உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டு வந்தால் பொறுப்புள்ள அரசாங்கத்தை அமைக்கும் உரிமை இல்லாமல் போய்விடும். வழிதான் என்ன என உறுப்பினர்கள் கேட்டபோது அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றார் அம்பேத்கர். தேர்தல் நடைபெறுவதால் சமஸ்தான ஆட்சிக்கு தொந்திரவு வரக்கூடாது என்பதை ஏற்கலாம் என்றார் அம்பேதகர்.

ஒடுக்கப்பட்டவர்களை கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள் போல் அரசியல் அடிப்படையில் தனிப்பட்ட இனத்தவர்களாகவே கொள்ளப்படுதல் வேண்டும். இரு அவைகளிலும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டும். நிலக்கிழார்களுக்கு பிரதிநிதித்துவம் ஏன் தேவை என கேள்வி எழுப்பினார். எந்த நாட்டிலும் தனிபிரதிநிதித்துவம் இல்லை என்றார்.

மகாத்மா காந்தியாரின் ஒத்துழைப்புடன் வயது வந்தோர் வாக்குரிமை இந்த மாநாட்டில் முற்றுப்பெறுமானால் அதனை உடன் நடைமுறைக்கு கொண்டுவரலாம். அப்படிக் கொடுத்துவிட்டால் தொழிலாளர்க்கென தனிப் பிரதிநிதித்துவம் தேவையில்லை. இல்லையெனில் பல்வேறுபட்ட தொழிலாளர் சங்கங்களுக்கு அங்கீகாரமளித்து அவற்றை தேர்தல் குழுபோல் ஒன்றிணைத்தால்தான் பிரதிநிதித்துவமுறை வெற்றிபெறும் என ஆலோசனை நல்கினார்.

செப்டம்பர் 18 1931 அமர்வில் அம்பேத்கருக்கும் பண்டிட் மாளவியாவிற்கும் இடையில் சமஸ்தான பிரதிநிதிகள், ஒடுக்கப்பட்டவர் கல்வி வாய்ப்புகள் குறித்து நல்ல விவாதம் நடைபெற்றது. அம்பேத்கர் மனம் குமுறி தான் படித்தவனாக இருந்தும் இந்த சமுதாயத்தில் தீண்டப்படாதவனாக இருக்கிறேன் என்றார். அதற்கு மாளவியா தாங்கள் ஆத்ம நண்பர்- உடன் உறையும் சகோதரர். தங்களுடன் பழகிட வைதீக இந்துக்களும் மகிழ்ச்சியுடன்

விரும்புகிறார்கள். இன்று ஒடுக்கப்பட்டவர் முன்னேற்றத்தில் பல பிராமணர்கள் பாடுபடுகிறார்கள். இதை அம்பேத்கர் ஏற்பார் என ஆறுதலைத் தந்தார் .

செப்டம்பர் 21 1931 அமர்வில் பொதுவாக இரு சபைகள் கூடாது என திரும்பக் கூறினார் அம்பேத்கர். மகாத்மா காந்தியின் கருத்துக்கு இம்முறையில் எதிரியாவேன். பலரும் சொல்வது போல் இரு சபைகளுக்கும் சம அந்தஸ்து என்பதை ஏற்கமுடியாது. தீர்மானகரமான அதிகாரம் கீழ் சபைக்கே இருக்க வேண்டும். மேலவைக்கு பண மசோதா மீது யோசனை சொல்லும் அதிகாரம் இருக்கலாம். ஆனால் அதை திருத்தி அமைக்கும் அதிகாரம் கூடாது. பண மசோதாவை கீழ்ச்சபைதான் கொண்டுவரவேண்டும் என அழுத்தமான பதிவை அம்பேத்கர் தந்தார்.

சாப்ரூ அவர்கள் அம்பேத்கரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார். இங்கிலாந்தும் அயர்லாந்தும் கூட்டாட்சி நடத்துபவையல்ல. கூட்டாட்சி அரசாங்கம் எதிலாவது உதாரணம் இருக்கிறதா? பதிலளித்த அம்பேத்கர் கூட்டாட்சியா தனியாட்சியா என்பதல்ல- கீழ்ச் சபைக்கு மட்டுமே அதிக சிறப்பு என்பதுதான் முக்கியமானது என்றார்.

செப்டம்பர் 28 1931 தொடங்கிய சிறுபான்மையோர் குழு அமர்வில் டாக்டர் அம்பேத்கர் காந்தியடிகள் ஆகிய இருவரிடையே நடந்த விவாதம் மிக முக்கியமானதாகும். ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றம் குறித்து இருவேறு பார்வைகளை செயல்திட்டங்களை விளக்கக்கூடிய விவாதமாக இதை உற்று நோக்கவேண்டும்.

அம்பேத்கர் தன் உரையில் வகுப்புவாரி உரிமை பிரச்னையில் மாநாட்டிற்கு வெளியே சமரச பேச்சுவார்த்தைகள் நடப்பதாக சொல்கின்றனர். அப்படி மேற்கொள்பவர்களுகு எந்தவித முழு அதிகாரமும் இல்லை என சுட்டிக்காட்டினார். காந்தி அவர்களின் அல்லது காங்கிரஸ்காரர்களின் பிரதிநிதித்துவத் தன்மை எவ்வாறிருந்த போதிலும் அவர்கள் எங்களைக் கட்டுப்படுத்தும் நிலையில் இல்லவே இல்லை என்பதை தெளிவுபடுத்துவதாகவும் குறிப்பிட்டார். சலுகை பெற விரும்புவர்களும் கூடுதலாக தரலாம் என நினைப்பவர்களும் எங்கள் பங்கிலிருந்து எதையும் எடுத்து கொள்ளக்கூடாது என்றார்.

இந்து முஸ்லீம் உடன்பாடு என இருதரப்பினருடன் பிரச்னை முடிந்துவிடக்கூடாது என்றார் ஹென்றி கித்னே. இந்தியாவின் படத்தில் காணப்படும் அனைத்துவகை சிறுபான்மையினருக்கும் வாய்ப்பு வேண்டும் என்பது அவரின் கோரிக்கையாக இருந்தது.

அக்டோபர் 1 1931 அன்று காந்தியடிகள் ஒருவாரகால ஒத்திவைப்பை கோரினார். ஆகாகான் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவிற்குவர

அவகாசம் கோரினார். ஆகாகான், உஜ்ஜல் சிங், அம்பேத்கர் உட்பட காந்தி கூறியபடி தீர்வு வருமாயின் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றனர். அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட பிரதிநிதியும் இடம்பெறவேண்டும் என்றார். காந்தி சந்தேகத்திற்கிடமில்லாமல் என பதிலளித்தார்.

வருங்கால அரசியல் நிர்ணய சட்டத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் அரசியல் அங்க்கீகாரமுள்ள ஓரினமாக அங்கீகரிக்கப்படுவார்கள் என நான் அறிந்துகொண்டால் ஒழிய மகாத்மா காந்தி குழுவில் சேர்ந்து பணியாற்றுவது உபயோகமாக இருக்குமா எனத் தெரியவில்லை என்றார் அம்பேத்கர்.

அம்பேத்கர், ஹென்றி போன்றவர்கள் என்ன நடக்கப்போகிறதோ என்று தேவையில்லாமல் அஞ்சுகிறார்கள் என பயப்படுகிறேன் என்றார் காந்தி. இந்தியாவில் உள்ள எந்தவொரு தனிநலனுக்கும் அல்லது வகுப்பினருக்கும் அல்லது தனிநபருக்கும் அரசியல் அந்தஸ்தினை மறுத்திட நான் யார்? தேசிய நலனைப் பலியாக்கிடும் குற்றத்தை நான் புரிவேனாகில் காங்கிரசின் பிரதிநிதி என்கிற முறையில் என்மீது காங்கிரஸ் கொண்டுள்ள நம்பிக்கைக்கு யோக்கியதையற்றவனாகி விடுவேன். அரசியலமைப்பினை உருவாக்கும் பணி தொடர்ந்து முன்னேறுவதற்கு வகுப்புவாத பிரச்னை இடையூறு செய்யக்கூடாது. அரசியல் அமைப்பின் முக்கிய அம்சங்கள் மீது பெரிதும் கவனம் செலுத்தவேண்டும் என்றார் காந்தி.

சட்டமன்றத்தில் தீண்டாதவர்களுக்கு எவ்வித பிரதிநித்துவமும் தருவதை நான் எதிர்ப்பதாக சொல்வது உண்மையை பரிகசிப்பதாகும். அவர்களுக்கு உறுதியாக அது நன்மை தராது - தீங்கு விளவிக்கும் என்பதால் தனிப்பிரதிநிதித்துவத்தை எதிர்க்கிறேன். சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதைக் காட்டிலும் அவர்களுக்குத் தேவை சமூக மதக் கொடுமையின் துன்புறுத்தலிருந்து பாதுகாப்பு அளிப்பதே ஆகும். சட்டத்தைக் காட்டிலும் வலிமை பெற்றதாக சமூக வழக்கம் இம்மக்களை கீழ்நிலைக்கு தள்ளியுள்ளது. அது குறித்து ஒவ்வொரு இந்துவும் வெட்கப்படவேண்டும். பிராயசித்தம் செய்யவேண்டும். இந்துக்களின் மனசாட்சி தட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. அனைத்தும் குற்றமாக்கப்படும் வகையில் கடுமையான சட்டம் கொண்டுவர விரும்புகிறேன். கடந்த கால சின்னமான தீண்டாமை ஒழிந்துவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை என காந்தி பதிலலைத் தந்தார்.

காந்திக்கு பதில் அளித்து அம்பேதகர் உரை ஆற்றினார். என்னையும் எனது நண்பரையும் விட மிக அதிகமாகக் காங்கிரஸ் தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக உள்ளது என்று மகாத்மா எப்போதும் பாத்தியதைக் கொண்டாடுகிறார். பொறுப்பற்றவர்கள் எப்போதும் கூறிக்கொண்டிருக்கும்

தவறான பல உரிமைகளில் இதுவும் ஒன்று. இப்படி உரிமைகள் கொண்டாடும் நபர்கள்தான் எப்போதும் தொடர்ந்து மறுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

பிரதம மந்திரி அவர்களே உடனடியாக பிரிட்டிஷ் அதிகாரத்தை இந்திய மக்களுக்கு மாற்றித்தரவேண்டும் என எந்த இயக்கத்தையும் தாழ்த்தப்பட்டவர்கள் ஆரம்பிக்கவில்லை- அதற்கு அவர்கள் ஆவலாகவும் இல்லை- கூக்குரலும் போடவில்லை. பிரிட்டிஷ் எதிர்த்து எங்களுக்கு மனக்குறைகள் உண்டு. அதேநேரத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அரசியல் அதிகார மாற்றம் செய்யப்படவேண்டுமென்று கூச்சலிடவில்லை என்பதுதான் உண்மை நிலை. இன்னும் வெளிப்படையாக சொல்லவேண்டுமானால் அதிகார மாற்றம் எங்கள் ஆசையுமல்ல- கவலையுமல்ல. நீங்கள் அதிகார மாற்றம் செய்தால் அது சிறு தன்னலக் கூட்டத்தின் கையில் மாட்டிக்கொள்ளாது, மற்றும் இந்துக்களோ முகமதியர்களோ உள்ள ஒரு கூட்டத்தின் கைக்குப் போய்விடாது என்ற நிபந்தனைகளை அதிகார மாற்றத்துடன் இணைக்கவேண்டும். எல்லா வகுப்பினரும் மக்கள் தொகைக்கேற்ப அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதே பிரச்னைக்கு முடிவு காண்பதாக இருக்கும் என அம்பேத்கர் தனது கடுமையான எதிர்வினையை தந்தார்.

காந்தி அம்பேத்கருக்கு பதிலளிக்கும் விதமாக பேசினார். நான் காங்கிரஸ் சார்பில் மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக நிற்கிறேன். வாக்கெடுப்பு நடத்தினால் அதில் முதல் இடம் பெறுவேன். வைதீக இந்துமதத்தின் அவமான தீண்டாமைப் பேயை ஒழிக்க தனித்தொகுதிகளும் இட ஒதுக்கீடும் துணைபுரியாது என்பதை தீண்டாத மக்களிடம் கூறுவதற்கு உழைப்பேன். மக்கள்தொகை கணக்கெடுப்பில் தீண்டப்படாத மக்கள் ஒரு தனி வகுப்பாகப் பிரித்தெழுதப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. தீண்டப்படாதவர்கள் நிரந்தரமாக தீண்டப்படாதவர்களாக இருப்பார்களா? அய்ரோப்பியர், முகமதியர், சீக்கியர் அப்படி இருக்கலாம். தீண்டாமை நிலைத்து நிற்பதைவிட இந்துமதம் செத்துப்போவதையே நான் விரும்புகிறேன்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் மேம்பாடு அடைவதற்கு அவர் காட்டும் ஆர்வத்திற்கும் அவரது அறிவுக்கும் நான் பெருமதிப்பளிக்கிறேன். இங்கு அவர் பெரிய தவற்றின் அடிப்படையில் தன்னை வருத்திக்கொண்டுள்ளார். அவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் அவரது முடிவில் இழையோடியிருக்கிறது என்றும் பணிவுடன் கூறிக்கொள்கிறேன். அனைத்துலக பேராட்சியே கிடைத்தாலும் தீண்டாத மக்களின் உரிமைகளை விலை பேசமாட்டேன். தகுந்த பொறுப்புணர்வுடன்தான் இவ்வாறு பேசுகிறேன்.

இந்தியாவிலுள்ள அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பேச முயற்சிப்பது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் முறையான உரிமையல்ல. இது இந்து மதத்தில் பிரிவினையை உண்டு பண்ணும். அப்பிரிவினையை நான் விரும்பவில்லை. தீண்டப்படாதவர்கள் விரும்பினால் கிறிஸ்துவம், இஸ்லாம் மதம் மாறுவதை நான் பொருட்படுத்த மாட்டேன். சகித்துக்கொள்வேன். ஆனால் கிராமங்களில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டால் இந்து மதத்திற்கு என்ன ஏற்படும் என்பதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. தீண்டப்படாதவர் அரசியல் உரிமைப் பற்றிப் பேசுவோர்க்கு இந்திய நாட்டைப்பற்றித்தெரியாது. சமுதாயம் எப்படி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியாது. இதை எதிர்ப்பது நான் ஒருவன்தான் எனில் உயிரையும் பணயம் வைத்து எதிர்ப்பேன் என காந்தியும் கடுமையாகப் பேசினார்.

முன்னதாக ராவ் பக்தூர் சீனிவாசன் மற்றும் டாகடர் அம்பேத்கர் மெமோரண்டம் ஒன்றை அளித்திருந்தனர். தனிப்பட்டு ஒடுக்கப்பட்டவர் எவர் என தீர்மானிப்பது, தனிவாக்காளர் தொகுதி, தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமை பற்றிய மெமோரண்டமது. சிறுபான்மையினர் அனைவரின் சார்பாக ஆகாகான், அம்பேத்கர், ஹென்றி, பன்னீர்செல்வம் போன்றவர்கள் தனியான மெமோரண்டம் ஒன்றையும் கொடுத்திருந்தனர். ஒடுக்கப்பட்டவர்களை அழைப்பது என்பதில் தற்போதுள்ள சுட்டுப்பெயர்கள் அவமதிப்பு அவமானம் செய்வதாக இருப்பதால் மாற்றவேண்டும். Non Caste Hindus, Non Conformist Hindus, Depressed Classes என்பதற்கு பதிலாக வேறு பெயரில் அழைக்கப்படவேண்டும். குறிப்பிட்ட பெயரை வற்புறுத்த எங்களுக்கு அதிகாரமில்லை என அம்பேத்கர் தெரிவித்தார்.

அக்டோபர் 14 1931 அமர்வில் நிதி வருவாயை மத்திய மாநில ஆட்சிகள் எப்படி பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பது குறித்து விவாதம் நடந்தது. மறைமுக வரிகள் மத்திய ஆட்சிக்கு, நேர்முக வரிகள் மாநில ஆட்சிக்கு எனும் விதி எங்கும் இருப்பதாக தெரியவில்லை. பல நாடுகளை நான் கவனமாக பரிசீலித்துவிட்டேன் என விளக்கிய அம்பேத்கர் வருவாய் இனங்கள், செலவினங்களை பட்டியலிட்டு காட்டினார். பொருளாதாரநிலை மத்திய அரசுக்குப் போதாக் குறையாகவே உள்ளது. வருமான வரியை மத்திய மாநில அரசுகள் பொது வருவாயாக கொள்ளவேண்டும். வரிவிதிப்பின் ஒரு பகுதியை மத்திய அரசும், மற்றொரு பகுதியை மாநில அரசுகளும் ஏற்கவேண்டும் என ஆலோசனை தந்தார்.

அக்டோபர் 15 1931 அமர்வில் அம்பேத்கர் இரு முறைகள் பற்றிச் சொல்கிறார். வருவாய் வாயில்களைத் தனியே பிரித்தொதுக்கி வைத்துக்கொள்ளுதல், கிடைத்த அவ்வருவாயை பகிர்ந்துகொள்ளுதல்- அடுத்ததாக வருவாய் ஆதாரங்களை ஒதுக்கித் தருதல் அல்லது பிரித்துக்கொள்ளுதல்,கிடைத்த

வருவாயைப் பகிர்ந்து கொள்ளுதல். முதல் வகையில் மாநில அரசு sleeping partner ஆகவே இருக்கும். இரண்டாவதில் தமக்கான வரிகளை பெறுவதில் அதிகார வரம்பை இரு அரசுகளும் பெற்றிருக்கும் என்றார்.

அக்டோபர் 22 1931 அமர்வில் கூட்டாட்சி நீதிமன்றம் பற்றிய விவாதத்திலும் அம்பேத்கர் தனது பார்வையை முன்வைத்தார். பல தேசிய அரசுகள் கூட்டாட்சியாக இணைந்து அமையும்போது சிக்கல்களை தீர்க்க கூட்டாட்சி நீதிமன்றம் சர்வதேச நீதிமன்றம் போல நடக்கவேண்டும். இராஜ தந்திரரீதியில் அல்லது போர்ரீதியில் தீர்த்துக்கொள்வது என்பது இல்லாமல் போவதால் நீதித்தீர்ப்புகள் மூலம் தீர்வு வேண்டும். இம்முறையை அமெரிக்கா உச்சநீதிமன்றம் கொண்டுள்ளது . அதேபோல் அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்த பாதுகாப்பையும் அவர் வற்புறுத்திச் சொல்கிறார்.

அம்பேத்கர் தனது அய்யப்பாட்டையும் தெரிவித்தார். வகுப்புவாதம்- கம்யூனலிசம், மாகாணவாதம்- புரொவின்சிலிசம் நீண்டகாலத்துக்கு இருக்கும். மாகாண அரசு தன் நலனுக்கு பொருந்திவராத தீர்ப்புகளை செயல்படுத்த தயங்காமல் சம்மதிக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. எனவே உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் செயல்படுத்தப்படுவதற்கு அரசியல் சட்டத்தில் வகை செய்யவேண்டும். ஆஸ்திரேலியா சட்டத்தை அம்பேத்கர் எடுத்துக் காட்டினார்.

நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகளில் கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் இருக்கவேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்புகள் இந்தியா முழுவதும் அமுலாகுமாறு பார்த்துக்கொள்வதற்கு கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் வேண்டும் என்றார் அம்பேத்கர். இதில் தலையிட்டு ஜின்னா பேசினார். அதிகாரம் இருக்கவேண்டும்- அந்த அதிகாரத்தை செயல்படுத்த பக்கபலமும் வேண்டும். அம்பேத்கர் இராணுவமா என வினவுகிறார். ஜின்னா சரி என ஆமோதிக்கிறார்.

இந்த விவாதத்தில் இடையிட்டு வந்த லார்டு லோதியன் அது போர் நடவடிக்கை ஆகிறது என்றார். அம்பேத்கர் அமெரிக்காவில் அரசியல் சட்டத்தில் ஏற்பாடு இருக்கிறது என பதில் தந்தார். ஜெயகர் ’உள்நாட்டுப்போர் அல்லது கூட்டாட்சிக்கு விசுவாசம்’ எது என தேர்ந்தெடுப்பதாகும் அல்லவா என்றார். அம்பேத்கர் இதை மறுக்கவில்லை என்றார். நம்முடைய அஸ்திவாரத்தை மணலின் மேல் அமைக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்றார் அம்பேத்கர். மத்திய மாநில உறவுப் பிரச்னைகளில் இன்றும் இவ்விவாதம் முக்கியத்துவம் பெறக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது

நவமபர் 2 1931 அமர்வில் சமஷ்டி அரசின் நீதிமன்ற அதிகார வரம்பு பற்றி அம்பேத்கர் தன் கருத்தை தந்தார். அரசியலமைப்பு சட்டத்திற்கு விளக்கம் தரும்

அதிகாரம் , பொருள் உரைக்கும் அதிகாரம் வேண்டும். சமஷ்டி அரசும்-மாகாண அரசும் ஒன்றின் அதிகாரத்தில் மற்றது தலையிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அடிப்படை உரிமைகள், சிறுபான்மை உரிமைகள் பற்றி கையாளும் அதிகாரம் இருக்கவேண்டும். அம்பேத்கர், ஜெயகர் போன்றவர்கள் அந்நீதிமன்றம் டெல்லியில் இருக்கவேண்டிய அவசியமில்லை என்றே கருத்து தெரிவித்தனர். ஜாபருல்லாகான் டெல்லிக்குத்தான் ஆதரவு அதிகம் என்றார்.

நவமபர் 16 1931 அமர்வில் இராணுவ தளபதிக்கும் இராணுவ அமைச்சருக்கும் இடையேயான உறவு குறித்து கருத்துக்கள் எழுந்தன. அம்பேத்கர் இவ்வுறவு எப்படி இருக்க வேண்டும் என சாப்ரூ நினைக்கிறார் என கேள்வி எழுப்பினார். கொள்கை, நிதி போன்ற பொது விஷயங்கள் அமைச்சரிடம் இருக்கலாம். தொழிநுட்பம் நிர்வாக விஷயங்கள் இருக்கவேண்டாம் என்ற பதிலை சாப்ரூ தந்தார்.

வட்டமேசை முடிந்து செளகத் அலி அவர்களும் அம்பேத்கரும் எஸ் எஸ் மூல்தான் கப்பலில் ஜனவரி 29 1932ல் திரும்பினர். அவர்களை வரவேற்க வழிமுறைகளை அரசாங்கம் வெளியிட்டிருந்தது. காங்கிரசார் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அம்பேத்கர் தன்னுடன் 24 பெட்டிகள் நிறைய புத்தகங்கள் வாங்கி எடுத்து வந்திருந்தார். காந்தியடிகளை ஆதரித்து நின்ற கஜ்ரோல்கர், பாலு போன்ற தலைவர்கள் கூட கப்பல்தளத்தில் அம்பேத்கரை வரவேற்று மாலை அணிவித்தனர். அம்பேத்கர், அலி இரு தலைவர்களும் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டனர். அன்று மாலை 14 அமைப்புகள் சார்பில் பரேலில் வரவேற்பு பட்டயம் தரப்பட்டது. ஒடுக்கப்பட்டவர்களுக்காக வட்டமேசை மாநாட்டில் துணிவுமிக்க போராட்டம் நடத்தியமைக்காக, மானிட ஆற்றலால் என்ன முடியுமோ அதை செய்தமைக்காக நன்றி பாராட்டி வரவேற்பு அளித்தனர்.

நீண்ட நெடுங்காலமாக அடக்கியொடுக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் சுரண்டப்பட்டும் வந்துள்ள எங்கள் அனைவருக்கும் பொதுவாழ்க்கையெனும் வானில் புத்தொளியாய் தாங்கள் உதயமான நாளே எங்களுக்குப் பொன்னெழுத்துக்களால் எழுதப்படவேண்டிய நாளாகும். ஒடுக்கப்பட்ட எமது சமுதாயத்திற்கு விடிவு அளிக்கக் கூடிய ஒரே வழியான அரசியல் அதிகாரத்தைப் பெறும் பாதையில் எங்களை வழிநடத்தி வெற்றி ஈட்டித்தரவல்ல தலைவர் தாங்கள் ஒருவரே என்று அதில் புகழாரம் சூட்டப்பட்டிருந்தது. இந்த வரவேற்பில் 114 சங்கங்கள் தங்களை இணைத்துக்கொண்டிருந்தன.

காந்தியடிகளை எதிர்ப்பதால் தன்னைத் துரோகி என காங்கிரசார் வர்ணிப்பதையும் ஆகாகானை காந்தி இரகசியமாக சந்தித்ததாகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவை குரான் மீது சத்தியம் செய்து

விலக்கிகொள்ள வேண்டியதாகவும், அதனை ஆகாகான் மறுத்த செய்தியையும் அம்பேத்கர் தெரிவித்தார். எவரையும் கடவுளாக்குவதை வெறுப்பதாகவும் தன்னையும் ஆக்கவேண்டாம் என அம்பேத்கர் கேட்டுக்கொண்டார்.

1932 பிப்ரவரி 28 அன்று சென்னையில் பத்தாயிரம் ஒடுக்கப்பட்டோர் திரண்டு அம்பேத்கரை வரவேற்றனர். முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், பார்ப்பனரல்லாதவர் பங்கேற்றனர். ஆதிதிராவிட மலையாளி சபை, ஆதி ஆந்திர மகாசபை, சென்னை ஒடுக்கப்பட்டவர் கூட்டமைப்பு போன்றவை பங்கேற்றன. இக்கூட்டத்தில் உரையாற்றிய அம்பேத்கர் எம் சி இராஜா அவர்களின் கூட்டுத்தொகுதி நிலைப்பாட்டை பல்டி என விமர்சித்தார். ஒடுக்கப்பட்டோர் மயக்கு மொழிகளில் சிக்காமல் புத்தர், இராமானுஜர் போன்றவர்களை நினைவில் நிறுத்த வேண்டிக்கொண்டார்.

1932 மே மாதம் நாக்பூருக்கருகில் காம்ப்டீயில் ஒடுக்கப்பட்டோர் பேராயத்தில் அம்பேத்கர் கலந்துகொள்ள மே7 அன்று நாக்பூர் வந்தார். அங்கு பெரும் வரவேற்பை பெற்றார். ராஜா- மூஞ்சே களம் எனும் சொல்லப்பட்ட இடத்தில் 15 ஆயிரம்பேர்கள் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த்து. இம்மாநாட்டில் உதகை முனுசாமிப் பிள்ளையும் கலந்துகொண்டு இரண்டுமணிநேரம் உரையாற்றினார். ராஜா- மூஞ்சே ஒப்பந்தத்தை மாநாடு நிராகரித்தது.

ஏப்ரல் 28, 1932ல் புனேயில் கொடுக்கப்பட்ட வரவேற்பில் கலந்துகொண்டு அம்பேத்கர் உரையாற்றினார். தான் பிறந்து வளர்ந்த சமுதாய மக்களின் தாழ்ச்சி நிலையைப் போக்கும் பணியில் உயிர் துறப்பதே தமது சூள் என்றார் அம்பேத்கர். இன்று இந்து மக்களின் பெரும் எதிரியாக துரோகியாக கருதப்படும் என்னை வருங்கால வரலாற்றாசிரியர்களும் இந்து சமூகமும் பாராட்டியே கூறுவார்கள். ஆலயங்கள், கிணறுகள், சமபந்தி விருந்துகளல்ல தேவை- தேவையெல்லாம் அரசுப்பணிகள், உணவு, உடை, கல்வியுடன் இதர வாய்ப்புகள் என்றார்.

பெல்காமில் மே 24, 1932ல் அம்பேத்கருக்கு வரவேற்பளித்தனர். அங்கு ரூ500 பணமுடிப்பும் பட்டயமும் வழங்கப்பட்டது. சமூக சீர்திருத்தத்திற்கு முன்னதாக அரசியல் சீர்தீருத்தம் தேவையென அம்பேத்கர் உரை நல்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் நலனுக்காக மட்டுமே பாடுபடுவது தன்னலம் என்றாலும், நாடு இழைத்து வரும் அநீதியின் பரிமாணத்தை பார்க்கையில் இத்தன்னலமும் நியாயமானதே என தன் நிலைப்பாட்டை விளக்கினார்.

பம்பாய் ஓர்லி இளைஞர்கள் கூட்டம் ஒன்றில் செப்டம்பர் 28, 1932ல் அம்பேத்கர் உரையாற்றினார். கோயில் நுழைவு போராட்டம் நல்லது என்றாலும் பொருளியல் நலனில் அக்கறை மிக அவசியம். ஆன்மீக நலனைவிட அது

முக்கியம் என்றார். இயக்கத்திற்கு தலைமை அலுவலக கட்டிடம் ஒன்றின் அவசியத்தை இக்கூட்டத்தில் எடுத்துரைக்கிறார்.

அக்டோபர் 9, 1932ல் பம்பாய் குடியிருப்பு பகுதி ஒன்றில் அவர் உரையாற்றும்போது மறுமை வாழ்வு குறித்த மாய மயக்கத்திலிருந்து வெளியேறி இவ்வாழ்வின் இன்னல் களைய சிந்திக்குமாறு வேண்டினார். கழுத்தில் துளசி மாலை தொங்குவதால் கடன்பிடியில் இருந்து மீள முடியுமா - யாத்திரைகளால் சம்பளம் கிடைத்துவிடுமா- வாழ்வில் பயனற்ற மூடநம்பிக்கைகளில், தியானங்களில் மூழ்கி சமுதாயம் கிடப்பதால் பிற்பட்ட நிலையும் தேக்கமும் வந்துள்ளதை எடுத்துச் சொல்லி அரசியல் அதிகாரம் என்பதில் ஒருமுகப்படுத்திக் கொள்ளுங்கள் என்றார்.

அக்டோபர் 28, 1932 கூட்டம் ஒன்றில் உங்கள் துன்பங்கள் பிறப்பிலேயே தீர்மானிக்கப்பட்டவை என்கிற மூட நம்பிக்கையிலிருந்து விடுபடுவதன் அவசியம் பற்றியும் , வறுமை பிறவிப் பயன், விதி எனச் சொல்வது பிழையாகும் என்பதையும் கற்பிக்கிறார்.

பிப்ரவரி 1933ல் பம்பாய் மாழ்கோவானில் கூட்டம் ஒன்றில் அம்பேத்கர் திலகருடன் தன் நிலையை ஒப்பிட்டுப் பேசினார். ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவின்றி, விடுதலை கோரிக்கையும், இந்து மக்களின் மேம்பாடும் நிறைவேறுதல் அரிது. இந்துக்கள் உங்கள் நன்மை நாட முயற்சிப்பது கருணையால் அல்ல - அவர்களின் நலனைப் பேணவே. நமது குறிக்கோள் நம்மீதான வல்லாண்மை அகற்றி, உயர் வகுப்பாரின் சலுகைகளை அகற்றி தளைகளை அறுத்தலேயாகும்.

புலால் உண்பதை கைவிடுங்கள். தன்மதிப்புடன் வாழக்கற்றுக்கொள்ளுங்கள். சாதிக்கவேண்டும் எனும் ஆர்வம் பெருகட்டும். பாடுபடுபவர்தான் உயர்வடைவர். புதிய யுகம் பிறந்துவிட்டது. இந்நாட்டின் அரசியலிலும் சட்டமன்றத்திலும் இடம் பெற்று உங்கள் இலக்குகளை நனவாக்குதல் இயலும் என் உணருமாறு அம்பேத்கர் கோரினார்.

இன்று சட்ட மன்றத்தில் தலித் பிரதிநிதிகள் அமர்தல் மிக சாதாரணமான ஒன்றாக ஆகியிருக்கலாம். அம்பேத்கர் அந்தப் போராட்டத்தின் கடினத்தன்மையை உணர்ந்து புதிய யுகம் என பேசுவதை பார்க்கும்போது அவரின் பெரும் உழைப்பிற்கான - கனவிற்கான பாதை தெரியும்.

இரயில்வே தொழிலாளர் குடியிருப்பில் தீண்டப்படாத மக்களின் கூட்டம் என ஒன்று மார்ச் 4 1933 இரவு 9.30க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு உரையாற்றிய அம்பேத்கர் எளிய மனிதனாகிய என்னை கடவுளாக்காதீர். தலைமையை வழிபடுவதை கிள்ளியெறியத் தவறுவீர்களாயின் அது உங்களை அழிவிற்கே கொண்டு செல்லும் என கற்பித்தார். விடுதலைக்கு தனிமனிதனை

சார்ந்து நிற்கும்போது உங்கள் கடமையில் கவனமின்றி வாழும் பழக்கம் வந்துவிடும்- தேசிய நீரோட்டத்தில் மரக்கட்டைகள் நிலையாகிவிடும் என அம்பேத்கர் எச்சரித்தார்.

இங்கும் அவர் புதிய யுகம் எனக் குறிப்பிட்டு சொல்கிறார். அது தந்துள்ள அரசியல் உரிமைகளை மதிக்க தெரிந்துகொள்ளுங்கள் என்கிறார். இந்து சமூகம் சீரழிய தலைமை வழிபாடு, மனிதனைக் கடவுளாக்குதல், கடமை மறத்தல் ஆகியவற்றை காரணங்களாக சுட்டுகிறார். உங்கள் அடிமைத்தனத்தை அகற்றுவதற்கு கடவுளை மகானை நம்பாதீர்கள்- உங்கள் விடுதலை அரசியல் உரிமை பெறுவதில் இருக்கிறதே தவிர புனித யாத்திரைகளில் அல்ல என்றார்.

சட்டமியற்றலும் அதை செயற்படுத்தலும் உங்கள் இசைவு, உதவி, கருத்துக்களைப் பெற்றே நடத்தப்பெறல் வேண்டும். உணவு, உடை, உறையுள், கல்வி மருத்துவம், வாழ்க்கைக்குரிய பொருட்கள் ஆகியவற்றை அமைத்துத் தருதலே சட்டமன்றங்களின் கடமையாகும். எனவே சட்டமியற்றும் அதிகாரத்தை நீங்கள் கைப்பற்றுங்கள் என அறிவுறுத்தினார்.

ஏப்ரல் 23, 1933 அன்று பம்பாயில் புனேவின் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அம்பேத்கர் பங்கேற்று உரை தந்தார். 8000க்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர். வட்டமேசை இரண்டாம் அமர்வில் காந்தியுடன் சேர்ந்துகொண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் நட்பு முறிவை உருவாக்கிக் கொள்ள இயலவில்லை. எவ்வளவு அதிகாரத்தை பெறமுடியுமோ அதற்கே முனைப்புக் காட்டப்போவதாக அம்பேத்கர் குறிப்பிட்டார்.

# IV

இந்திய அரசியல் சட்ட சீர்திருத்த இணைந்த குழுவின் சார்பில் (member of the Joint Committee on Indian Constitutional Reform ) பல்வேறு முக்கிய நபர்களை அம்பேத்கர் குறுக்கு விசாரனை நடத்தினார். இந்தக்காலம் ஜூன் 1933 துவங்கி நவம்பர் 1933வரை நீண்டது. சர்ச்சில், சர் சாமுவேல், மூஞ்சே, ராஜ்குமாரி அம்ரித் கவுர், எம் கே ஆச்சார்யா, ஹட்டன் போன்ற பலரை அம்பேத்கர் தனது குறுக்கு விசாரணைக்கு உட்படுத்துகிறார். அதன் சாரமாக சில அம்சங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

ராஜ்குமாரி அம்ரித் கவுர் உடன் அம்பேத்கர் நடத்திய விசாரணை பெண்கள் இட ஒதுக்கீடு பற்றியதாக இருந்தது. வயதுவந்தோர் வாக்குரிமை வரும்வரை வகுப்பு அடிப்படையில் அல்லாது பொதுவாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அடிப்படையில் பெண்கள் ஒதுக்கீடு என்பதை ஏற்கலாம் என்றார் அம்ரித் கவுர்.

இட ஒதுக்கீடு என்பதை நாங்கள் ஏற்கவில்லை. அது திணிக்கப்பட்டால் எதிர்ப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

வகுப்பு அடிப்படையை கொள்ளாத நேரடி தேர்தல்முறை என அம்பேத்கர் குறுக்கு விசாரணைக்கு கவுர் பதிலளித்தார். ஆண் பெண் ஒருங்கிணைந்த தொகுதி என்பதையும் கவுர் வலியுறுத்தினார். அம்பேத்கரின் வேறு ஒரு கேள்விக்கு பதில் தந்த அம்ரித் கவுர் சட்டமன்றங்களில் இருப்பவர்களைவிட வகுப்புக் கண்ணோட்டம் பொதுமக்களிடம் குறைவானதாகவே இருக்கிறது. கூட்டு வாக்காளர்களால் வாக்குகளை நாம் பெற முயலும் போது ஏற்படும் வகுப்புக் கண்ணோட்டம் தனி வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் வகுப்புக் கண்ணோட்டத்தைவிடக் குறைவாகவே இருக்கும். வகுப்புக் கண்ணோட்டம் வராமலும் போகலாம் எனக் குறிப்பிட்டார்.

அடுத்து புனே ஒப்பந்தம் தொடர்பான சாட்சிய விசாரணை பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. இன்றும் இக்குறிப்புகள் விவாத களத்தில் முட்டிமோதிக்கொண்டிருக்கின்றன. சாட்சியங்கள் குறிப்பேட்டிலிருந்து ஜுலை 31 1933ல் புனே ஒப்பந்தம் பற்றிய குறிப்புகள் இந்த வால்யூமில் இணைக்கப்பட்டிருக்கிறது.

அதில் சர் என் என் சர்க்கார் பிரதமருக்கு டிசம்பர் 14 1932ல் எழுதிய கடிதம் சுட்டிக்காட்டப்படுகிறது. வங்க சட்ட மேலவையின் 25 உறுப்பினர்கள் செய்துகொண்ட முறையீட்டில் வங்க இந்துக்களை கலந்து ஆலோசிக்காமல் செய்யப்பட்ட உடன்பாடு புனே ஒப்பந்தம் எனக் குறிப்பிட்டுள்ளனர். வங்கத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் அரசியல்ரீதியாக துன்பப்பட்டுக்கொண்டிருக்கவில்லை. அம்பேத்கருக்கும் மற்றவர்களுக்கும் வங்க நிலைமைப் பற்றித் தெரியாது. இந்து சமுதாயம் வங்காளத்தில் வளர்வதை வேரறுத்துவிட புரட்சிகரமான மாற்றத்தை புனே ஒப்பந்தம் உருவாக்குகிறது. வங்கத்திற்கு பொருத்தமாக புனே உடன்படிக்கையை மாற்ற வேண்டுவதாக அந்த உறுப்பினர்கள் எழுதியிருந்தனர். இந்த உறுப்பினர்களில் சியாமாபிரசாத் முகர்ஜியும் ஒருவர்.

அம்பேத்கருக்கு இவர்களின் கூற்றை மறுக்கும் வேறு தந்தி வந்திருந்தது. அதில் அமைச்சரவை ஒப்புதல் அளித்த புனே உடன்படிக்கையை திருத்திக்கொள்ள முடியாது என இருந்தது. அதில் காணப்பட்ட பெயர்கள் பிர்லா மற்றும் தக்கர்.

என் என் சர்க்கார் வேறு தந்தியையும் காட்டினார். அத்தந்தி சர் இரவீந்திரநாத் தாகூரால் என் என் சர்க்காருக்கு ஜுலை 27 1933ல் அனுப்பப்பட்டிருந்தது. அதில் தாகூர் மகாத்மாஜி தெரிவித்த யோசனையை ஏற்க தாமதிக்க வேண்டாம் என பிரதமருக்கு தந்தி அனுப்பியதை சொல்கிறார். புனே உடன்படிக்கை ஏற்படுத்தும் விளவு என்ன என்பதைப் பற்றி சிந்திக்க அந்த நேரத்தில் அவகாசம் இல்லாமல் போய்விட்டது. வங்கத்திலிருந்து ஒருவர்கூட பொறுப்பான

பிரதிநிதியாக இல்லை. இந்தப் பிரச்சனையின் உடனடித் தீர்வில்தான் மகாத்மாஜியின் ஜீவன் இருந்தது. கவலை நெருக்கியதால் நான் அதை ஒத்துக்கொள்ள நேர்ந்தது. அது தவறு என்று இப்போது நான் உணர்கிறேன்.

அரசியல் அனுபவம் இல்லாததாலும் மகாத்மாஜியிடம் பெரிய அளவில் அன்பும், அவரது அரசியல் அறிவுக்கூர்மையில் நம்பிக்கையும் வைத்திருந்ததாலும் நான் பரிசீலனை செய்யாமல் வங்காளத்தின் விஷயத்தில் நீதி பலியிடப்படுவதைக் கவனிக்காமல் ஒத்துக்கொள்ள துணிந்தேன். வகுப்புவாத பிணக்கு ஊக்கம் பெற்றுள்ளதைப் பார்க்கும் போது நமது மாநிலத்தில் அமைதியான அரசமைப்பது கடினம் என்பது அத்தந்தியில் காணப்பட்ட வாசகங்கள்.

பிரதமருக்கு டாக்டர் அம்பேத்கர் ஜனவரி 5 1933ல் கடிதம் எழுதினார். அதில் சர்க்கார் எழுதிய ( டிசம்பர் 19 1932) கடிதம் பற்றி விவாதிக்கிறார். பிரிட்டிஷ் அரசு புனே உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட பின்னர் என்னைப் பொறுத்தவரை இந்தப் பிரச்னை முடிந்துவிட்ட ஒன்று. வங்கம் மட்டும் மாற்றம் கோரமுடியாது என அம்பேத்கர் தன் வாதங்களை வைத்தார். பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்குமான உடன்பாடு அது என்றார். வங்கத்திலிருந்து ராஜா கட்சியை சேர்ந்த இளைஞர் பிரதிநிதியாக இருந்தவர் ஒன்றிணைந்த வாக்களர்கள் முறையை ஏற்கும்படி என்னிடம் ஒன்றறை மணிநேரம் வாதிட்டார் என்பதை அம்பேத்கர் வெளிப்படுத்தினார்.

டாக்டர் மூஞ்சேயிடம் சாட்சிய விசாரணையை அம்பேத்கர் மேற்கொண்டார். அதில் 1932 செப்டம்பர் 19 தேதி பண்டிட் மாளவியா தலையில் நடந்த பம்பாய் மாநாடு குறித்து விசாரிக்கிறார். ஜெயகர், தேஜ் பகதூர் சாப்ரூ, தாழ்த்தப்பட்ட மற்றும் சாதி இந்துக்களின் குழு அமைந்தது பற்றியும் அதன் நடவடிக்கைகள் குறித்தும் வினவுகிறார். மகாத்மா ஒப்புதலுடன் ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட்டதா என்கிற கேள்வியையும் அவர் எழுப்பினார். ஆம் என்றார் மூஞ்சே. அடுத்து பம்பாயில் செப்டம்பர் 25ல் கூடிய இந்துக் குழுவில் வாக்கெடுப்பு வந்ததா என அம்பேத்கர் வினவுகிறார். அதில் தான் ஆஜராகவில்லை என்ற மூஞ்சே தான் அறிந்த விவரத்தை சொல்வதாக தெரிவிக்கிறார். அடுத்து கவாய் அவர்களிடம் நீங்கள் ராஜா- மூஞ்சே ஒப்பந்தக்கட்சிக்காரரா எனக் கேட்கிறார். கவாயும் ஆம் என்கிறார்.

அம்பேத்கர் மிக முக்கிய கேள்வி ஒன்றை எழுப்பினார். செப்டம்ர் 24-26 1932ல் டில்லியில் இந்து மகாசபைக் கூட்டம் நடந்ததா- ராமனந்த சட்டர்ஜி இருந்தாரா- யார் தலைமையில் நடந்தது?

மூஞ்சே தனது விளக்கத்தை தருகிறார். மகாத்மா காந்தியின் உயிரைக் காப்பாற்றுவது என்பதால் இந்து மகாசபா புனே உடன்பாட்டை ஏற்றுக்கொண்டனர். இரண்டாவது வட்டமேசை மாநாட்டின்போது

அம்பேத்கருடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். கூட்டு வாக்காளர், மக்கள்தொகை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டால் அம்பேத்கர் திருப்தியுறுவார் என தெரிந்து இந்து மகாசபாவுடன் நான் உடன்பாடு மேற்கொண்டேன். நானும் அம்பேத்கரும் கையெழுத்திட்டு கூட்டுக்கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பலாம் என அம்பேத்கருக்கு நான் யோசனை கூறினேன் என மூஞ்சே தெரிவித்தார்.

அம்பேத்கர் அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை என உடனடியாக எதிர்மொழியை நல்கினார். முதலாம் வட்டமேசையில் இதனை அம்பேத்கர் ஒத்துக்கொண்டார் என்றார் மூஞ்சே. இதை அமெரிக்க பத்திரிகைகளுக்கும் அவரது இசைவுடன் தெரிவித்தோம் என்றார். இதையும் அம்பேத்கர் மறுத்தார்.

பாய் பரமானந்த் வங்கம் போலவே பஞ்சாபும் உடன்பாட்டை ஏற்கவில்லை எனப் பேசினார். அவரிடம் அம்பேத்கர் தன் கேள்விகளை முன்வைத்தார். பஞ்சாபில் தாழ்த்தப்பட்டவர் உள்ளனரா இல்லையா. பாய் பரமானந்தர் அவர்கள் தீண்டப்படாதவர்களாக இல்லை என்றார். அம்பேத்கர் பாய் பரமானந்த் பேச்சின் முரண்களை சுட்டிக்காட்டினார்.

ஜே பானர்ஜி வங்கத்தில் 'தீண்டாமை- நெருங்காமை' பற்றி அரசாங்கம் விசாரணை நடத்தட்டும். அங்கு நூற்றாண்டாக சாதித்தடைகளை எதிர்த்து போராட்டம் நடந்துள்ளது. புனேவில் ஒப்பந்தம் ஏற்பட்டது. அங்கு வங்க சாதி இந்துக்கள் ஏன் அழைக்கப்படவில்லை என வினவினார்.

பானர்ஜியிடம் குறுக்கு விசாரணையை அம்பேத்கர் மேற்கொண்டார். புனே உடன்பாடு குறித்த மன்னர் அறிவிப்பு செப்டம்பர் 26 1932 வந்தது குறித்த விளக்கத்தையும் பானர்ஜிக்கு தருகிறார். மத்திய சட்டமன்றத்தில் எவரும் எதிர்க்கவில்லையே என பானர்ஜிக்கு ஜெயகரும் பதில் தருகிறார்.

வங்க சட்டமன்றத்தில் பிரிட்டிஷ் அரசால் அங்கீகரிக்கப்பட்ட உடன்பாட்டை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து அம்பேத்கர் கேள்வி எழுப்பினார். சட்டர்ஜி அத்தகைய தீர்மானம் கொண்டுவந்ததை ஏற்றார். அதே நேரத்தில் நாமசூத்திரர் பிரதிநிதி ரசிக் பிஸ்வாஸ் மற்றும் மாளவியா வேண்டுகோளை ஏற்று விலக்கிக்கொண்டேன் என சட்டர்ஜி பதிலைத் தந்தார். அம்பேத்கர் மூஞ்சேயிடம் இந்து மகாசபை சார்பாக தாங்கள் தாழ்த்தப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்களா எனக்கேட்டார். அதற்கு ஆம் என மூஞ்சே பதில் அளித்தார். இதை மறுப்பதாக சொல்லி அம்பேத்கர் விளக்கினார்.

அடுத்து அனைத்திந்திய வருணாசிரம சுயராஜ்ய சங்கத்தின் எம் கே ஆச்சார்யா, தேஷ்பாண்டே, ஜே எல் பானர்ஜி போன்றவர்களை அம்பேத்கர் விசாரித்து சாட்சியம் பெற்றார். சமயத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் என்ன

என வினவ அதற்கு ஆச்சாரியா இக்குழு 3 மணிநேரம் எனது விளக்கத்தை கேட்கத்தயார் எனில் சொல்வேன் என்றார்.

எந்த ஒரு சமயத்தையும் பாதிக்கக்கூடிய ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தும் முன் அம்மாநிலத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட சமயத்தலைவர்களின் கருத்தை அறிய கவர்னர் அதை அவர்களுக்கு அனுப்பவேண்டும். அவர்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்கேற்ப சட்டம் மாற்றி அமைக்கப்படலாம் என்றார். சமய நிறுவனங்களின் தலைவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்கிறீர்களா என அம்பேத்கர் வினவினார். நீங்கள் பிராமணரா என்றார். ஆம் என ஆச்சாரியா பதிலளித்தார். பல்வேறு மடங்கள், பிராமணர் அல்லாதவர் கோயில் அம்சங்களில் சமத்துவத்துவதிற்காக போராடுவதை அம்பேத்கர் சுட்டிக்காட்டுகிறார். நீதிக்கட்சி பற்றியும் குறிப்பிடுகிறார்.

ஆச்சார்யா நீதிக்கட்சியினர் மாறிவருகிறார்கள். பிராமணர்களையும் கட்சியில் சேர்க்கிறார்கள் என்றார். ஆச்சார்யாவிற்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த விரும்புவதாக அம்பேத்கர் கூறினார். புனே உடன்பாடு அரசியல் தீர்வு என்பதுடன் இந்துக்கள் மீது குறிப்பிட்ட கடமைப் பொறுப்பையும் சுமத்தியுள்ளது. தீண்டாமையை கைவிடவேண்டும்- கோவில்களை திறந்துவிடவேண்டும் என வலியுறுத்தியுள்ளது என காந்தி கூறியிருப்பது உண்மைதானே எனக் கேட்டார். ஆச்சார்யா காந்தி அப்படித்தான் பேசினார் என நினைக்கிறேன் என பதில் தந்தார். மாளவியா இவ்வாறு செய்யும்படி இந்துக்கள் மீது கட்டுப்பாடு ஏதுமில்லை- புனே ஒப்பந்த முடிவுகளை ஏற்க முடியாது என்கிறாரே என அம்பேத்கர் அடுத்த வினா தொடுத்தார். ஆச்சார்யா ஆம் அப்படித்தான் என அதற்கும் பதிலை தந்தார்.

ஆதிவாசி மக்களை தனியாக வைக்கலாம் என பேசிய ஜே எச் ஹட்டனுடன் அம்பேத்கர் விவாதிக்கிறார். அவர்களையும் சமுதாயத்தின் பிரிக்கமுடியாத பகுதியாக்குவது குறிக்கோள் என்றால் அவ்வாறு செய்வது சரியா என்பது அம்பேத்கர் கேள்வியாக இருந்தது. ஆதிவாசிகள் கற்றறிந்த பிற பகுதியினரால் சுரண்டலுக்கு உள்ளாக நேரும் என்பது ஹட்டன் கருத்தாக இருந்தது. இந்த மக்கள் நிலத்திலிருந்து விரட்டியடிக்கபட்டவர்களாக இருக்கிறார்கள். பழங்குடிமக்கள் தனித்துவிடப்படமாட்டார்கள் என தனது நம்பிக்கையை அம்பேத்கர் தெரிவித்தார்.

சர்ச்சில் அவர்களிடம் அம்பேத்கர் சாட்சியம் மேற்கொண்டார். சர்ச்சில் அரசின் தீர்மானத்திற்கு திருத்தம் கொடுத்திருந்தார். இந்தியாவில் குடியேற்ற நாட்டு அரசியலமைப்பை நிறுவுவதற்கு அவையைக் கட்டுப்படுத்தும் எதுவும் தீர்மானத்தில் கூடாது எனக் கோரியிருந்தார். பிரிட்டிஷின் இந்திய வர்த்தகத்திற்கு பாதிப்பு கூடாது. இந்தியாவில் தன்னாட்சியை

விரிவுபடுத்துவது- அமைதி ஒழுங்கு நல்லாட்சி நிலைநாட்டுவதற்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குள்ள பொறுப்பை ஊறுபடுத்தக்கூடாது என்பது சர்ச்சில் தரப்பு வாதமாக இருந்தது.

இது தொடர்பாக டிசம்பர் 3 1931ல் காமன்ஸ் அவையில் நடந்த விவாதத்தை அம்பேத்கர் சுட்டிக்காட்டுகிறார். எனது தீர்மானம் ஏற்கப்பட்டிருந்தால் மகிழ்ச்சி அடைந்திருப்பேன் என்றார் சர்ச்சில். இந்த நேரத்தில் இந்தியாவில் ஒரு சமஷ்டி கூட்டமைப்பை நிறுவுவதை நான் ஒரு போதும் ஆதரித்ததில்லை என அம்பேத்கருக்கு உறுதிபடத் தெரிவித்துக்கொள்வதாக சர்ச்சில் பேசினார். வயதுவந்தோர் வாக்குரிமை என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்றார். ஏன் என அம்பேத்கர் வினவ அது நடைமுறை சாத்தியம்மற்றது என்றார் சர்ச்சில்.

சர் சாமுவேல் ஹோர் அவர்களிடமும் சாட்சிய விசாரணையை அம்பேத்கர் நடத்தினார். சாமுவேல் ஹோர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்வு கம்யூனல் அவார்ட் குறித்து விளக்கினார். வட்டமேசை மாநாட்டில் எழுந்த வாதங்கள் - வேறுபாடுகள்- லோதியன் இந்திய வாக்குரிமைக்குழுவின் ஆலோசனைகள்- அரசின் தீர்ப்பு- காந்தியின் உண்ணாநோன்பு- பிரதமர் காந்தி இடையேயான கடிதப்போக்குவரத்து ஆகியவற்றை எடுத்துரைத்தார்.

காந்தியின் ஆதரவுடன் சாதி இந்துக்களின் பிரதிநிதிகளும் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட பேச்சுவார்த்தை - புனே உடன்பாடு - அவார்டில் பரிந்துரைக்கப்பட்டதைவிட ஒதுக்கீடு கூடுதலான இடங்கள் தரப்பட்டதை சாமுவேல் தொட்டுக்காட்டினார். அதேசமயம் வேறுபட்ட தேர்தல் முறை புகுத்தப்பட்டதையும் , அரசும் தனது தீர்வில் திருத்தம் செய்யும் இந்த ஷரத்துக்களை ஏற்றதையும் அதைத் தொடர்ந்து காந்தியும் உண்ணாநோன்பை முடித்துக்கொண்டதையும் செய்தியாக பகிர்ந்துகொண்டார்.

சமஷ்டி சட்டமன்றத்தில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு உள்ள இடங்களில் மூன்றிலொரு பகுதியை முஸ்லீம்களுக்கு ஒதுக்கும் விஷயத்திலும், சமஸ்தானங்களுக்கு எத்தகைய ஒதுக்கீடு என்பதிலும் கடுமையான எதிர்ப்பு இருப்பதை அரசு காண்கிறது என்பதை சாமுவேல் குறிப்பிட்டார்.

இது தொடர்பான விவாதத்தின் ஊடாக முதல்நிலை தேர்தலில் நான்குபேர் கட்டாயம் போட்டியிட்டுதான் ஆகவேண்டும் (ஒடுக்கப்பட்டோர் இடங்களில்) என்பதில்லை என்ற விளக்கத்தை தந்தார் அம்பேத்கர்.

இந்தத் தீர்வின்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பர். அவர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் ஏற்பாடு 20 ஆண்டுகளுக்குப் பிறகு முடிவுக்கு வரும், அப்படித்தானே என என் என் சர்க்கார்

கேள்வி எழுப்பினார். இதற்கு சாமுவேல் ஆமாம் என பதில் அளித்தார். சாமுவேல் புனே உடன்பாட்டிற்கு ஆதரவாக வந்த தந்திகளில் ஒன்று ரவீந்திரநாத் தாகூருடையது என சர்க்காருக்கு நினைவூட்டினார். தாகூரின் வாசகம் என்ன என்று தெரிவிக்க ஜெயகர் வேண்டினார். ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள தாகூர் வற்புறுத்தியுள்ளார் என சாமுவேல் ஹோர் விடை பகர்ந்தார்.

சர்க்கார் சர் சாமுவேல் ஹோர் ரவீந்திரநாத் தாகூர் ஒரு பிராமணர் என்பதை அறிவாரா என்றார். சாமுவேல் தங்கள் மூலம் அறிந்துகொண்டேன் என்றார். உண்மை என்னவெனில் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வற்புறுத்திதான் கணக்கற்ற தந்திகள் வந்தனவே தவிர எதிராக ஒன்றுகூட வரவில்லை என சாமுவேல் குறிப்பிட, காந்திக்கு பயந்துகொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் செய்துவிட்டதாக சர்க்கார் குற்றம் சாட்டினார்.

அம்பேத்கர் விவாதத்தில் தலையிட்டு புனே ஒப்பந்தம் வங்காளத்தில் மிகப்பெரிய பாதிப்பை, விளைவுகளை ஏற்படுத்தும் என்ற கருத்தைச் சர் சாமுவேல் ஹோர் ஒத்துகொள்கிறாரா என வினவினார். சாமுவேல் இல்லை என்றார். என் என் சர்க்கார் தான் அப்படி நினைப்பதாக கூறினார்.

சாமுவேல் ஹோர் அடுத்து மாநில அரசுகள் கூட்டாட்சி அரசின் உத்திரவுகளை நிறைவேற்றுவதுதான் நல்லது என்பதை சுட்டிக்காட்டினார். அம்பேத்கர் மாநில அரசுகள் அடங்காப் பிடாரிகளாக மாறி, மத்திய அரசின் ஆளுகைக்கு ஒத்துப்போகாத நிலை உருவாகிறபோது, மத்திய அரசு மாநில அரசின் நிர்வாக அமைப்புகளை தங்கள் பணிக்கு பயன்படுத்திக்கொள்ளாமல் தங்கள் நிர்வாகப் பணிகளை நிறைவேற்றிக்கொள்ள தமது சொந்த அமைப்புகளை நியமித்துக்கொள்ளலாம் என்பதே சரியானதாக இருக்குமென்கிற கருத்தை வெளிப்படுத்தினார். சாமுவேல் அப்படி செய்யலாம் என ஏற்றார்.

அம்பேத்கர் மேலும் இது குறித்து சாமுவேல் ஹோருடன் விவாதிக்கிறார். தற்போதுள்ள இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி ஒருங்கிணைந்த பட்டியல் என்பது எப்போதுமே அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டு வந்துள்ளது என்றார். சாமுவேல் ஹோர் பெரிதும் மையப்படுத்தப்பட்டுள்ள இந்திய அரசாங்கத்தை ஒரு கூட்டாட்சி அரசாங்கமாக மாற்ற நாம் திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார். ஒற்றையாட்சியிலிருந்து கூட்டாட்சி முறைக்கு மாறும்போது புதிய சூழ்நிலை உருவாகக்கூடும். அதனால் தனித்தியங்கும் அதிகாரம் உடைய மாநில அரசுகள் அடங்கிய கூட்டமைப்புக்குள் நுழைகிறபோது பல பிரச்னைகள் ஏற்படும் என கருதுவதாகவும் ஹோர் தெரிவித்தார்.

அம்பேதகர் மிக முக்கிய கேள்வி ஒன்றை எழுப்பினர். மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பதை மத்திய அரசுக்கு தெரிவிக்கவேண்டும் என விரும்புகிறீர்களா- மாநில நிர்வாகம் பற்றி அறியும் அதிகாரம் இருக்கவேண்டும் என நினைக்கிறீர்களா? இதற்கு ஹோர் இல்லை என பதில் தந்தார்.

என் எம் ஜோஷி (தொழிற்சங்கத் தலைவர்) கல்வி சம்பந்தமாக குறிப்பிட்டு இதில் அகில இந்திய அறிக்கை என தயாரிப்பது இருக்காதா- அமெரிக்காவில் மாநிலங்கள் முழுமைக்குமாகவே கல்வி அறிக்கை செய்யப்படுகிறது என அம்பேத்கர் கேள்விக்கு வலு சேர்த்தார்.

அம்பேத்கரின் கூர்மையான வாதங்களுக்குப் பின்னர் சாமுவேல் ஹோர் மாநில அரசிடமிருந்து தேவைப்படும் விவரங்களைப் பெறுவது இதில் அடங்கும் என்றே நான் அனுமானிக்கிறேன் என்றார்.

பிற்பட்ட வகுப்பு மக்களும் சிறுபான்மையினர் என்பதில் வருவார்களா என அம்பேத்கர் வினா எழுப்பினார். இதற்கு பதில் அளித்த ஹோர் இதுபற்றி இன்னும் தெளிவாக சிந்திக்க விரும்புகிறேன். இது சிக்கலான கேள்வி என்றார். அம்பேத்கர் இந்த விவாதத்தில் தாழத்தப்பட்டவர் காவல் பணியில் அமர்த்தப்படக்கூடாது என்று கூறுவது ஆளுநரின் தனி அதிகாரம் என்ற விதியின் கீழ் வராது என்பதை சாமுவேல் ஹோரிடம் தெளிவாக்கிக்கொள்கிறார்.

வட்டமேசையில் அம்பேத்கர் வாதங்களிலும், காந்தியுடன் அவர் மேற்கொண்ட விவாதத்திலும், சாட்சியங்கள் விசாரணையிலும் அவரின் கடும் உழைப்பை நாம் பார்க்கமுடியும். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை எனும் பெரும் போரில் தனது பெயருக்கு களங்கம் ஏற்பட்டதையும் பொருட்படுத்தாமல் அதில் முழுக்கவன குவிப்பை செய்ததை நாம் உணரமுடியும். இந்த விவாதங்கள் இன்றும் கூட பரந்துபட்ட விவாதபரப்பில் முக்கியத்துவம் கொண்டனவாகவே இருப்பதையும் நாம் அவதானிக்க முடியும்.


Ref:

Dr Babasaheb Ambedkar’s Writings and Speeches vol 2

Vol 17 III

பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் நூல்தொகுப்பு 5

தொகுப்பு 37



ஆசிரியரின் பிற நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்

2. ரோசாலக்ஸம்பர்க்

3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்

5. Trade Justice in Telecom

6. Selected Ideas of O.P Gupta

7. ஹெகல் துவங்கி..

8. கார்க்கியின் அரசியல்வெளி

9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

10. காந்தியைக் கண்டுணர்தல்

11. நேருவின் மரபு

12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்

## சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்
6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்

www.pattabiwrites.in